

# வேல்ஸ்

அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்

(DEEMED TO BE UNIVERSITY Estd. u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்று 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம் - சென்னை - இந்தியா

UGC 12B அங்கீகாரம் பெற்ற நிறுவனம்


முத்தமிழ் விழாச் சிறப்பிதழ்

மாணவ இதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு



உலக மகளிர் திருநாளில் வேல்ஸ் வேந்தர் கல்வித் திருமகன் கலைமாமணி டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்களால் "வேல்ஸ் மகளிர் சாதனையாளர் விருது-2024", தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பேராசிரியர் டாக்டர் கௌரி இரமேஷ், தொழில் முனைவோர் செல்வி வந்தனா இராமநாதன், தடகள வீராங்கனை செல்வி சாந்தி சௌந்தர்ராஜன், ஊட்டச்சத்து நிபுணர் மற்றும் தொழில் முனைவோர் செல்வி ஷைனி சுரேந்திரன், நடிகை மற்றும் பிக்பாஸ் சீசன் 7 வெற்றியாளர் செல்வி அர்ச்சனா இரவிச்சந்திரன், பின்னணிப் பாடகி செல்வி பிரியங்கா ஆகியோருக்குச் சிறப்புடன் வழங்கப்படுதல். வேந்தருடன், வேல்ஸ் பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் ஆர்த்தி கணேஷ், வேல்ஸ் குழுமத் துணைத் தலைவர் டாக்டர் பிரீத்தா கணேஷ் ஆகியோர்.


சிறகு : 9 இறகு : 14
15, மார்ச் 2024
பருவமுறைப் பறப்பு

வெளியீடு :
தமிழ்த்துறை, மொழிகள் புலம்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்



# VISION and MISSION

**Dr. Ishari K. Ganesh**
M.Com., M.B.A., M.L., Ph.D.

Chancellor
VELS University

**Founder - Chairman**
VELS Group of Institutions

## Our Vision

Vels University strives to be a beacon of excellence in higher education by effectively providing its students with high standards of education and rigorous training with ample scope for the all-round development of the personality of the students and to promote positive change and social justice for the betterment of society.

## Our Mission

Vels University endeavours to provide relevant academic programs of theory & practical-oriented knowledge in order to empower the students to achieve professional and personal success in today's competitive, diverse and dynamic society by providing excellent research-support facilities, coaching by experienced faculty, excellent infrastructure, and collaborative research; fostering a culture of assessment, accountability, academic integrity and life-long learning.

## Quality Assurance

Vels University has established a system of Quality Assurance to monitor and enhance the quality of education. Quality Advisory Committee and Internal Quality Assurance Cell are constantly working towards this goal.

VELS
KNOWLEDGE IS POWER

# வேல்ஸ்



அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்

(DEEMED TO BE UNIVERSITY Estd. u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்று 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம் - சென்னை - இந்தியா

UGC 12B அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

## டாக்டர் ஐசரி கே.கணேஷ் எம்.காம்., எம்.பி.ஏ., எம்.எல்., பிஎச்.டி.,

**நிறுவனர் - வேந்தர்**



‘‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்’’

என நம் தாய் மொழியாம் தமிழை, உலக அரங்கில் ஓங்கி ஒலிப்பதற்கான ஆக்கப் பணிகளைச் செய்திட, மகாகவி பாரதியார் ஆணையிட்டுக் கவி முழக்கம் செய்கின்றார்! பாரதியின் கனவை நினவாக்கிடும் வகையில், தமிழுக்கு ஆக்கம் சேர்க்கின்ற அனைத்துப் பணிகளையும் நம் வேல்ஸ் பல்கலைக்கழகம் முன்னெடுத்து வருவதில் நான் மன நிறைவு கொள்கின்றேன்!

‘‘செப்பு மொழி பதினெட்டுடையாள் – எனில் சிந்தனை ஒன்றுடையாள்’’ எனத் தாய்த் திருநாடம் இந்தியத்தின் ஒருமைப்பாட்டுக்காகக் குரல் கொடுத்த பாரதியின் ’பிறந்த பொன்னாளினை’, நம் வேல்ஸ் கல்வியியல் புலமும் மொழிகள் புலமும் இணைந்து, ’பாரத மொழிகளின் திருநாளாக’க் கொண்டாடியது! அதேபோன்று, வேல்ஸ் தமிழ்த் துறையும் தமிழ் மன்றமும் இணைந்து, ’காசி தமிழ்ச் சங்கமம் – சிறப்புக் கருத்தரங்கத்தை’ இனிதே நிகழ்த்தியது!

வேல்ஸ் மொழிகள் புலத்தின் தமிழ், இந்தி, பிரெஞ்சு ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து, ஆங்கிலத்துறையின் முன்னெடுப்பில் ’உலகத் தாய்மொழித் திருநாள்’ வேறு எங்கும் இல்லாத் தனிச் சிறப்புடன் கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது! விழாவில், ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய அயலக மொழிகளோடு தமிழ், இந்தி, வங்காளம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், குஜராத்தி, மணிப்புரி உள்ளிட்ட இருபதிற்கும் மேற்பட்ட மொழியினர் பங்கேற்று, அவரவர்கள் தங்கள் தாய்மொழியால் வாழ்த்துரை வழங்கி, ஓர் எடுத்துக்காட்டுத் திருவிழாவாக இதனை ஆக்கிக் காட்டிய நம் வேல்ஸ் மாணவ மாணவியர் அனைவருக்கும் என் பாராட்டுகள் உரியன!

தமிழ் துறையின் முன்முயற்சியோடு, ’உலகத் தாய்மொழித் திருநாள் இணையவழிக் கவியரங்கம்’ நூற்றுக்கணக்கான கவிஞர்களின் பங்களிப்போடு சிறப்பாக நடைபெற்றதும், அந்தக் கவிதைகளின் தொகுப்பு, ’கவியாரம்’ என்னும் நூலாக வெளியிடப்படுவதும் அதுபோன்றே, உலக மகளிர் திருநாளில், தமிழ்த்துறை மகளிர் பேராசிரியர்களின் கூட்டு முயற்சியில், வேல்ஸின் அனைத்து மகளிர் பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவியர்கள் ஆகியோர்தம் திறன்மிகு கவிதைப் படைப்புகளின் தொகுப்பில் வடிவம் கொண்ட ’உங்கள் நாள்’ என்னும் கவிதை நூல் இங்குக் கொடையாக்கப்பட்டுள்ளதும் என்னைப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது!

அதிக எண்ணிக்கையில் முனைவர் பட்டதாரிகளை உருவாக்கும் உயர் ஆய்வு மையமாக இயங்கிடும் வேல்ஸ் தமிழ்த்துறை, கலந்தோறும் தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்குகளைத் தக்க வகையில் நடத்துவதோடு, அவற்றை ’ஆய்வுக் கோவை நூல்களாக’வும் வெளியிட்டு, ’வேல்ஸ் பதிப்புப் பணிக்கு’ வளம்சேர்த்து வருவது குறிப்பிடத்தக்கது! தமிழோசை உலகமெலாம் பரவிடத் தாமும் களம் அமைத்து வகைசெய்திடும் நம் வேல்ஸின் முத்தான முத்தமிழ் வாழ்த்துகள்...!

வேல்ஸ் பல்கலைக்கழக மாணவர்களின் ஒருமித்த முயற்சியால் ’வேல்சு சிறகு’ என்னும் அறுதிங்கள் இதழ், பல்லாண்டுகளாக தொடர்ந்து வெளிவருவதை எண்ணி மகிழ்கிறேன்! வேல்ஸ் மாணவச் செல்வங்களின் படைப்பாற்றலை, கலை வளத்தை, ஆளுமைத் திறத்தை அடையாளம் கண்டு, ஊக்குவித்து அதற்கான அரங்கேற்றுக் களமாக ’வேல்சு சிறகினை’ வண்ணமய அழகோவியமாக வடிவமைத்து வெளியிட்டு வருகின்ற வேல்சு இதழின் பொறுப்பாசிரியர் உள்ளிட்ட நம் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நல்வாழ்த்துகள்!

வேல்ஸ் தமிழ்த்துறை, ஆண்டுதோறும் முத்திரை பதித்திடும் ஓர் எழிற்கோலத் திருவிழாவாகக் கொண்டாடிடும் ’முத்தமிழ், இந்த ஆண்டில் 15.03.2024 அன்று நிகழவிருப்பதும், அதனைப் போற்றும் வண்ணம் ’வேல்சு சிறகு’ இதழ், ’முத்தமிழ் விழாச் சிறப்பிதழாக’ வெளிவருவதும் இன்புற்று வரவேற்பதற்குரியது! வேல்ஸ் பல்கலைக்கழக மாணவர்கள்தம் படைப்பாளுமையால் விரிந்திடும் இந்த மாணவ இதழ் ’வேல்சு சிறகின்’ பயணம் உச்சம் நோக்கிப் புத்தெழுச்சியோடு புகழ் வானில் பறந்து உயர்ந்திட, என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்! ’தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவிடத் தாமும் களம் அமைத்து வகை செய்திடும் நம் வேல்ஸின் முத்தான முத்தமிழ் வாழ்த்துகள்...!

(ஐசரி கே.கணேஷ்)

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு

**மாணவ இதழ்**

புரவலர்

**கல்வித் திருமகன் கலைமாமணி**

முனைவர் **ஐசரி கே. கணேஷ்**
நிறுவனர்– வேந்தர்

காப்பாளர்

பேராசிரியர் **ஆ. ஜோதி முருகன்**
துணைத்தலைவர்

**மாணவப் பதிப்பாசிரியர் குழு**

சு.இசக்கியம்மாள் III உயிரி தொழில்நுட்பவியல்
ஜே.பெரோஸ் ஷெரிம் III சட்டத்துறை ஐ.சந்தோஷ் III வான்பரப்பியல்
வ.கனிமொழி III இளம் பொறியியல் உயிர் தொழில் நுட்பவியல்
லி.திவ்யதர்ஷினி III உயிரி தொழில் நுட்பவியல் துறை
பா.அபுபக்கர் சித்திக் III தளவாடங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை
ம.மரிய ஏசுதாஸ் III இளம் பொறியியல் பெட்ரோலியம் வி.திவ்யா II பொருளியியல்
ம.தேவிபிரியா II காட்சித் தொடர்பியல் ச.இன்பத்தமிழன் II உயிர் வேதியியல்
வி.விஷ்வா II கணினிப் பயன்பாட்டியல் எம்.கஜேந்திரவர்மன் II கணினி அறிவியல்
சி.சிந்து II தகவல் தொழில்நுட்பவியல் துறை த.சிந்தியா ஹெலன் மேரி II நுண் கணினியியல்
இ.ஸ்ரீநந்தினி II உயிரி தொழில்நுட்பவியல் சா.தமிழ்ச்செல்வன் II நுண் உயிரியியல்
சு.கீதாஞ்சலி I கணினி பயன்பாட்டியியல் பி.பிரபாவதி I வணிகவியல்
இரா.சுர்ஜித் I வேதியியல் ச.ஸ்ரீகமலேஷ் I வணிகவியல் கந்தசுப்ரமணியன் I வணிக மேலாண்மையியல்
லோகேஷ் I சட்டத்துறை ச.பிரித்தி I நுண் உயிரியல்

சிறப்பாசிரியர்
பேராசிரியர் **ப. மகாலிங்கம்**
புலமுதல்வர் மொழிகள் புலம்,

பொறுப்பாசிரியர்
முனைவர் **இரா.பன்னிருகைவடிவேலன்,**
இணைப்பேராசிரியர்

பதிப்புச் செயன்மையர்
பேராசிரியர் **வெ. சிவசங்கர்**
தமிழ்த்துறைத் தலைவர்

பதிப்பு நெறிமையர்
முனைவர் **பெ. மோகன்**
இணைப்பேராசிரியர்

பதிப்பு ஆற்றுப்படுத்துநர்
பேராசிரியர் முனைவர் **க.கமலா**

முனைவர் **ம. பிரபாகரன்**
உதவிப்பேராசிரியர்

முனைவர் **சி. கமலக்கண்ணன்**
உதவிப்பேராசிரியர்

முனைவர் **ரா.ராஜா**, முனைவர் **பொ.குபேந்திரன்**
முனைவர் **தே.தேன்மொழி**, முனைவர் **செ.மார்கண்டன்**, இணைப்பேராசிரியர், முனைவர் **அ.இருதயராஜ்,**
முனைவர் **எ.பச்சையப்பன்**, இணைப்பேராசிரியர், முனைவர் **ம.பிரகாஷ்**, முனைவர் **நா.தீபாராணி,**
முனைவர் **ச.பிரியா**, முனைவர் **கி.துர்காதேவி**, முனைவர் **யு.துர்காதேவி**, முனைவர் **சு.சாந்தி**
உதவிப்பேராசிரியர்கள், தமிழ்த்துறை

வெளியீடு:

**தமிழ்த்துறை - மொழிகள் புலம்**
**வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்**
பல்லாவரம், சென்னை – 600 117
(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறகு : 9

இறகு : 14

வேல்ஸ் பல்கலைக்கழகம்

வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு

15, மார்ச் 2024

மாணவ இதழ்

## இதழ் பேசுகிறது...

தொழில்நுட்பம் மற்றும் சமூகஊடகங்கள் நம் சமூகத்தைப் புயலாகத் தாக்குவதால், இன்று மாணவர்கள் வாழ்க்கையின் பல்வேறு சிறப்பம்சங்களைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள். மாணவர்கள் ஆர்வமுள்ளவர்கள், தொழில்நுட்பத் திறமையாளர்கள், அறிவுக்கூர்மையுடைவர்கள் மற்றும் தெளிவானவர்களாக விளங்குகின்றனர்.

கட்டுரைகளை வரைவதிலும் கட்டமைப்பதிலும் மாணவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். டிஜிட்டல் காகித எழுது கருவிகள் கல்வி நிலப்பரப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளன. இது மாணவர்களின் வெற்றியைக் கணிசமாக உயர்த்துகிறது. மாணவர்களின் படைப்பாக்கத் திறன்களை வளர்க்கும் நோக்கில் 'வேல்சு சிறகு' அவர்களின் ஆற்றலை வெளிக்கொணரும் வண்ணம் உள்ளது. மாணவர்களின் படைப்புத்திறனை இந்நூல் முழுக்கக் காணலாம்.

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனத்தைத் தென்னிந்தியாவின் முதன்மைக் கல்வி நிறுவனங்களில் ஒன்றாக உயர்த்தியவர் நம் வேந்தர். விஸ்டாஸ் ஒரு பரந்துபட்ட கலாச்சாரத்தை முன்வைக்கிறது. அங்கு பல்வேறு வகையான சமூக, கலாச்சார மற்றும் புவியியல் பின்னணிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாகச் சேர்ந்து படிக்கின்றனர். வேல்ஸ் உலகளாவிய தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்குகிறது. சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் பசுமை வளாகத்தை உள்ளடக்கிய பலதரப்பட்ட வசதிகளை வேல்ஸ் கொண்டுள்ளது. மாணவர் மற்றும் ஆசிரியர்களின் ஒவ்வொரு தேவையும் சிறப்பான முறையில் பூர்த்தி செய்யப்படுகிறது.

வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்கள், திரைத்துறையின் நலிந்த கலைஞர்களுக்கு நேரடியாக வங்கிக்கணக்கில் பணம் செலுத்தி வருகிறார். இதன் மூலமாகப் பல்லாயிரக் கணக்கான குடும்பத்தின் துயர்துடைக்கும் சமூகச் சிந்தனையாளராகத் திகழ்கிறார். 'வேல்ஸ் கட்டணம் இல்லா கல்வி' எனும் திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளார். வேல்ஸ் இலவசத் திருமணம், பல்கலைக்கழகம் அமைந்துள்ள பல்லாவரப் பகுதியில் செயல்பட்டுவரும் அரசு பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளியிலும் பயின்று பன்னிரெண்டாம் வகுப்பை நிறைவு செய்த, வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள, தந்தையை இழந்த ஏழு மாணவர்களுக்குக் கட்டணமில்லாமல் கல்வி பயில, இலவசக் கல்விக்கான ஆணையை வழங்கியுள்ளார்.

வேல்ஸ் பல்கலைக்கழகம், பெண்களைப் போற்றும் விதமாக ஆண்டுதோறும், சமூதத்தில் சிறந்து விளங்கும் பெண் ஆளுமைகளுக்கு 'வேல்ஸ் மகளிர் சாதனையாளர் விருதுகளை' வழங்கிக் கௌரவப்படுத்தி வருகிறார். வேல்ஸ் நிதியம் வாயிலாக சமூகத்தின் வளரும் இளம் தலைமுறைப் பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், தொடக்க நிலை 'வித்து நிதியமாக' (ளீளள னிலிஜளதீ) ரூபாய் இரண்டு இலட்சத்தைக்
கொடையாகத் தொடர்ந்து வழங்கிவருகிறார்.

கல்வித்திருமகன் டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்கள் 'வேல்சு சிறகு' என்னும் மாணவ இதழின் வாயிலாக மாணவப் படைப்பாளர்களை உருவாக்குவதில் முனைப்புடன் செயலாற்றி வருவது மகிழ்ச்சிக்குரியதாக அமைகின்றது. அந்த வகையில், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை வழியாக, பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர்கள், அலுவலகங்களில் பணிபுரியும் மகளிர் மற்றும் பல்கலைக்கழக மாணவிகள் போன்றோரின் படைப்புத்திறனை வெளிக்கொணரும் உங்கள் நாள் எனும் மகளிர்க் கவிதைத் தொகுப்பும், 'கவியாரம்' எனும் கவிதைத் தொகுப்பும் வெளிவர வேந்தர் அவர்கள் ஊக்கப்படுத்தியுள்ளார்.

வேல்சு சிறகு என்னும் மாணவ இதழ் வெளிவருவதற்குப் பெரும் பங்காற்றி வரும் மொழிகள்புல முதல்வர் பேராசிரியர் ப.மகாலிங்கம் அவர்களுக்கும் இவ்விதழில் தம் பங்களிப்பை நல்கியுள்ள படைப்பாளர் களுக்கும் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் தொடர்பாகப் பல்வேறு நிழற்படங்களைக் கொடுத்துதவிய திரு. ஜோ. ஆண்டனி வீரபுத்திர ராஜா, செய்தித் தொடர்பாளர் திரு. சு. சிவகுமார், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வெ. சிவசங்கர் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், பிற துறைப் பேராசிரியர்கள், மாணவச் செல்வங்கள் ஆகியோருக்கு இத்தருணத்தில் என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன்..!

**முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்**

பொறுப்பாசிரியர் - வேல்சு சிறகு



# வேல்ஸ் பல்கலைக்கழக வாழ்த்துப் பாடல்

**பேராசிரியர் ப.மகாலிங்கம்**
**புலமுதல்வர், மொழிகள் புலம்**
**வேல்ஸ் பல்கலைக்கழகம்**

ஆர்த்திடும் அலைகடல் ஞானத் திருக்கோயில் வாழிய வாழியவே!
கீர்த்திமிகு நம் வேல்ஸ் பல்கலைக்கழகம் வாழிய வாழியவே!

ஆயிரம் ஆயிரம் பல்திசை மாணவர் நாடி
ஆளுமை பெற்றிடும் சங்கமச் சமுத்திரம்!
பாயிரப் புகழ் மைந்தர் கணேச வள்ளல்தம்
தந்தை வேலனார் நினைவில் நிமிர்ந்த கல்வி இமயம்!
வாழிய வாழியவே!

பன்னோக்கில் மின்னேர் பொறியியல் மருத்துவம் சட்டம் வணிகம்
அறிவியல் ஆய்வு எனவளர்
கல்வி நூறென அணிசெயப் புதுமைக் கனிந்திடும்
வேல்ஸ் பல்கலைக்கழகம்!
பன்னாடும் பாரதமும் தமிழ்நாடும் இருபால் மாணவத்தால்
இணைந்து நிற்க மண்ணில் தெரியுது வேல்ஸ் வானம்!
வாழிய வாழியவே!
சமநீதி சமுகநீதி மனிதம் போற்றும் மூச்சுக் காற்றால்
சாதனை படைக்கும் நம்பிக்கைப் பூஞ்சோலை!
வாழிய வாழியவே!

அன்னை வேல்ஸ் வளர்த்த மாணவச் செல்வங்கள்
சமுதாய வானமெங்கும் மின்னும் நட்சத்திரங்கள்!
மேன்மை விளைத்திடும் வேல்ஸ் எனும் பல்கலைக் குடும்பம்
கால்கொண்டதுவோ சென்னைப் பல்லாவரத்தில்!
புத்தெழில் தாழம்பூரில் மணம் பரப்பிப் புது உதயத் தெலுங்கானாவில்
படர்ந்தோங்கி,
நானிலம் போற்றிட இந்தியமாக வளரக் காண்போம்!
வளரக் காண்போம்!
நித்தமும் புதிதாய்ப் பிறந்திடும்
நித்தமும் புதிதாய் வளர்ந்திடும்
வித்தக மாணவர் அறிவு எழுச்சியின்
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!!!



# வேல்ஸ் மருந்தாக்கியல் கல்லூரி முதல் வேல்ஸ் பல்கலைகழகம் வரை ஒரு சகாப்தம்


**சு.ஜெயக்குமாரி**

பேராசிரியர், மருந்தாக்கியல் துறை,

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர்ஆராய்ச்சி நிறுவனம்,சென்னை,தமிழ்நாடு.

8667315408 / nisajayaa@gmail.com


வேல்ஸ் மருந்தாக்கியல் கல்லூரி உருவாகி முப்பது வருடம்
உருவாக்கப்பட்ட மருந்தாளுநர்களோ முப்பதியாரம்.

சிறுகுன்றாக பிறந்தது மயிலைலே
சிகரமாக உயர்ந்தது பல்லாவர மலையிலே

எங்கள் கலைமாமணி வேந்தரின் மூத்த குழந்தை
கல்வி நாயகனின் இதயத்திலும் இடம் பிடித்த செல்ல குழந்தை.

பட்டபடிப்புடன் தொடங்கிய வேந்தரின் கல்லூரி பயணம்
முனைவர் படிப்புடன் பல்கலைகழமாக பயணிக்கிறது

அன்று இருப்பதைந்து மாணவகருடன் தொடங்கிய மருந்தாக்கியல்
கல்லூரி இன்று, எண்ணூறுக்கும் மேற்பட்ட மாணவர்களுடன்
பல்கலைக்கழகமாக.

பல்கலைக்கழகம் பெற்ற பட்டங்களை விட ( NBA , NAAC, NIRF,12B UGC) மாணவர்கள் பெற்ற பட்டங்கள் எண்ணிலடங்கா..

ஆய்வு கூடத்துடன் ஆரம்பித்த கல்லூரி

இன்று ஆராய்ச்சி கூடம்,

மருந்தின் தரம் அறியும் கூடம்,

மருந்து உற்பத்தி செய்யும் கலமாக

பார் போற்றும் மருத்துவ பல்கலைக்கழகமாக

பல்லாவரதிலே பரந்து விரிந்துள்ளது.

| | | |
|---|---|---|
| இளங்கலையாக | 1992ல் | பிறந்து |
| முதுகலையாக | 2000ல் | வளர்ந்து |
| பல்கலைக்கழகமாக | 2008ல் | உயர்ந்து |
| ஆராய்ச்சிகூடமாக | 2022ல் | பரிணாம வளர்ச்சி |

அடைந்துள்ளது

வேல்ஸ் மருந்தாக்கியல் பள்ளிக்கூடம்

| | | | |
|---|---|---|---|
| நோய் | இல்லா | மக்கள் | இல்லை |
| மருந்து | இல்லாத | நோய் | இல்லை |
| மருந்து | இல்லாமல் | மருத்துவம் | இல்லை |
| மருந்தாளுநர்கள் | இல்லாமல் | மருந்து | இல்லை |
| வேல்ஸ் | இல்லாமல் | மருந்தாளுநர்கள் | இல்லை. |

எங்கள் வேந்தரின் முதல் நிறுவனம் -- மருந்தாக்கியல் கல்லூரி

கடைசி நிறுவனம் மருத்துவம்

வேந்தரின் முதலும் கடைசிமாக

எங்கள் மருத்துவதுறை என்ற பெருமையுடன்



# இலக்கின் நேரம்

P. Kamalesh
Student of Bio medical Engineering
Phone no:-9944576507

வணக்கம், எனது முதல் கதையின் பெயர் ‘இலக்கின் நேரம்‘. இக்கதையில் இரண்டு கதாபாத்திரங்கள் உள்ளன.

(ஒரு நாள் புகழ் தெருவில் நடந்துக் கொண்டிருந்தார். இவர் ஒரு மென்பொருள் நிறுவனத்தின் மேலாளர். தெருவில் நடந்து செல்லும் வழியில் எதிரே, துரையைக் கண்டார். புகழ் மற்றும் துரை இருவரும் பள்ளி நண்பர்கள்.

(இருவரின் உரையாடல்)

புகழ்:- வணக்கம், துரை எப்படி இருக்கிறாய்? .

துரை;- வணக்கம், புகழ் நான் நன்றாக இருக்கிறேன் மற்றும், நீ நலமா? .

புகழ்:- நானும் நன்றாக இருக்கிறேன் .

துரை:- வெளியூரில் இருந்து எப்போது வந்தாய், ஆறு வருடங்களாக இந்த கிராமம் உனக்கு ஞாபகம் இல்லையா.

புகழ்;- இன்று தான் வந்தேன், இன்னும் வீட்டிற்குக் கூட செல்லவில்லை, என் கார் பழுதாகி தெரு முனையில் நிற்கிறது, இங்கு பக்கத்தில் மெக்கானிக் கடையைக் கண்டுபிடிக்க நடந்து வந்தேன்.

துரை:- சரி என் வீட்டிற்கு வா…, பக்கத்தில் தான் உள்ளது.

(அந்த இடத்தில் ஒரு மெக்கானிக் கடையை பார்த்தார்கள். அங்கே

மெக்கானிக் கடைக்குப் பக்கத்தில் துரை வீடு இருந்ததை புகழ் பார்த்தார். பின்பு, துரை மெக்கானிக் கடையில் வேலைச் செய்யும் நபரை அழைத்து, கார் சாவியை அவரிடம் கொடுத்துவிட்டு, என் வீட்டிற்கு வா.... என்றார். அவர் துரை வீட்டிற்குள் சென்று அமர்ந்தார் பின்பு அவரது நண்பனும் அமர்ந்தார்).

புகழ்:- இங்கு நீ, என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்?, நீ நம் பள்ளியின் முதல் மாணவர் தானே. இங்கு மெக்கானிக் கடையில் என்னச் செய்கிறாய்?. நான் தான் பள்ளியில் சரியாக படிக்கவில்லை. ஆனால், நான் மென்பொருள் நிறுவனத்தின் மேலாளர். பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, நீ என்ன செய்தாய்?.

துரை:-எனது பள்ளிப் படிப்பை முடித்த பிறகு நான் கல்லூரியில் சேர்ந்தேன். நான் நன்றாகப் படித்து கல்லூரியில் முதலிடம் பெற்றேன், அந்த நேரத்தில் இலக்கைச் சரியாக வைக்கவில்லை. அதனால், என்னால் சாதிக்க முடியவில்லை, இருந்தாலும் முயற்ச்சியைக் கைவிடவில்லை. நான் நம் கிராமத்திற்கு வந்தேன், அந்த நேரத்தில் நான் எனது 'இலக்கின் நேரத்தை' அறிந்து இலக்கை நிர்ணயித்தேன், அது மெக்கானிக் கடை ஒன்றை திறக்க வேண்டும் என நினைத்து. இம்முறை, நேரத்தை நான் சரியான முறையில் பயன்படுத்தினேன். சரி, பள்ளியில் நீ நன்றாகப் படிக்க மாட்டாய். எவ்வாரு மென்பொருள் நிறுவனத்தின் மேலாளராக நீ ஆனாய்?.

புகழ்:-எனக்கு புரிந்தது, எனது பள்ளிப்படிப்புக்குப் பிறகு நான் கல்லூரியில் சேர்ந்தேன், அந்த நேரத்தில் எனது இலக்கை சரியாக வைத்திருந்தேன். இப்போது எனது இலக்கை அடைந்துவிட்டேன், எனது இலக்கின் நேரத்தை சரியான முறையில் பயன்படுத்தினேன்.

இக்கதை மூலம் நான் சொல்வது. நம் வாழ்வில் 'நேரம்' என்பது மிகவும் முக்கியமானது, அது நம் முடிவைப் பொறுத்து மாறுபடும், அந்த முடிவு நம் வாழ்வின் எதிர்காலத்தை மாற்றும். அது இலக்கின் நேரம் மட்டுமே ஆகும். இந்த தலைமுறை மாணவர்கள் சிலர் இலக்கின் நேரத்தை பயன்படுத்தவில்லை. 'வாழ்வில் அதிக நேரம் இருக்கும் ஆனால், அதிக வாய்ப்புகள் இல்லை'. ஆகவே, இந்த வாய்பையும் நேரத்தையும் பயன்படுத்தி, உங்கள் இலக்குகளை அமைக்கவும், ஏனெனில் இது உங்கள் இலக்கின் நேரமாகும் என கூறி இக்கதையின் முதல் பாகத்தை நிறைவு செய்கிறேன்




# உலக பணியாளர்கள் பாராட்டு தினம்

முன்னுரை

- பணியாளர் பாராட்டு தினந்தை ஆராய்தல்
- பணியாளர் முயற்சிகளை அங்கீகரிபதன் முக்கியத்துவம்
- பயனுள்ள பணியாளர் பாராட்டு முயற்சிகளை உருவாக்குதல்
- நன்றியுணர்வு கலாச்சாரத்தை வளர்ப்பது

முடிவுரை

**முன்னுரை**

இன்றைய ஆற்றல்மிக்க மற்றும் போட்டி நிறைந்த பணிக்குழலில், ஒரு நேர்மறையான பணியிட கலாச்சாரத்தை வளர்ப்பதிலும் நிறுவன வெற்றிக்கு உந்துதலிலும் பணியாளர்களின் பாராட்டுகளின் முக்கிய பங்கை நிறுவனங்கள் பெருகிய முறையில் அங்கீகரிக்கின்றன.

**பணியாளர் பாராட்டு தினத்தை ஆராய்தல் :**

பணியாளர் பாராட்டு தினம் ஆண்டுதோறும் மார்ச் 2 அன்று கொண்டாப்படுகிறது. ஆனால் இந்த 2024ஆம் ஆண்டு மார்ச் 1 அன்று கொண்டாப்படுகிறது இது பணியிட காலாச்சாரத்தின் நிலப்பரப்பில் ஒரு

அடித்தளமாக உள்ளது. இது வெறும் தேதி மட்டும் மட்டுமல்ல தனிநபர்களின் ஆழமான அங்கீகாரமாக இது திகழ்கிறது. ஊழியர்களின் முயற்சிகளை அங்கீகரித்து மதிப்பிடுவதன் முக்கியத்துவத்தை விளக்குகிறது. கூட்டு முயற்சிகள் மூலம் நிறைவேற்றப்பட்ட கூட்டு சாதனைகள் மற்றும் மைல்கற்களை இடைநிறுத்தி சிந்திக்க தலைவர்கள் மற்றும் சகாக்களுக்கு இது ஒரு தருணம்.

**பணியாளர் முயற்சிகளை அங்கீகரிப்தன் முக்கியத்துவம்:**

ஒரு நேர்மையான பணிச்சூழலை வளர்ப்பதில் பணியாளர் முயற்சிகளை அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தை மிகைப்படுதத்த முடியாது. பணியளர் பாராட்டு என்பது வெறும் அங்கீகாரத்தை மீறுகிறது. நிறுவன வெற்றிக்கும் தனிநபர்கள் செய்யும் விலைமதியற்ற பங்களிப்புகள் பற்றிய ஆழமான புரிதலை இது உள்ளடக்கியது. தலைவர்கள் தங்கள் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பை அங்கீகரித்து கொண்டாட நேரம் ஒதுக்கும்போது அவர்கள் விசுவாயம் மற்றும் அர்ப்பணிப்புக்கான விதைகளை விதைக்கின்றார்.

பணியாளர் பாராட்டு என்பது பணியாளர்களுக்குள் மனஉறுதியை அதிகரிக்க ஒரு சக்திவாய்ந்த ஊக்கியாக செயல்படுகிறது. இது சொந்தம் மற்றும் நோக்கத்தின் உணர்வை வளர்க்கிறது. இது அதிக வேலை திருப்தி மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு வழிவகுக்கிறது. தனிநபர்கள் பங்களிப்பிற்காக பாராட்டப்பட்டால் அவர்கள் தங்கள் சக ஊழியர்களை ஆதரிப்பதற்கும் பொதுவான இலக்குகளை நோக்கி ஒன்றாக வேலை செய்வதற்கும் அதிக விருப்பம் காட்டுகிறார்கள்.

**பயனுள்ள பணியாளர் பாராட்டு முயற்சிகளை உருவாக்குதல்!**

அர்த்தமுள்ள சைகைகள் மற்றும் முன்முயற்சிகளை இணைப்பதன் மூலம், நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களிள் பங்களிப்புகளை மதிப்பிடுவதில் தங்கள். உறுதிப்பாட்டை வெளிப்படுத்தலாம். அதன் மூலம் நேர்மறையான மற்றும் ஆதரவான பணிச்சூழலை வளர்க்கலாம். ஒவ்வொன்றும். ஊழியர்களின் முயற்சிகளை அங்கீகரிக்கவும் கொண்டாடவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாராட்டு கலாச்சாரத்தை வளர்ப்பதில் குழுவை உருவாக்கும் செயல்பாடுகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன பாரம்பரிய முன்முயற்சிகளுக்கு கூடுதலாக, நிறுவனங்கள் ஊழியர்களுக்கு பாராட்டுக்களைக் காட்ட இன்னும் புதுமையான வழிகளை ஆராயலாம். ஆரோக்கிய திட்டங்களை ஒழுங்கமைத்தல், தொழில்முறை வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குதல் அல்லது சிறந்த செயல்திறனுக்காக வெகுமதிகள் மற்றும் ஊக்கங்களை வழங்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

**நன்றியுணர்வு கலாச்சாரத்தை வார்ப்பது !**

நன்றியுணர்வு கலாச்சாரத்தை வளர்ப்பது ஒரு பணியிட சூழலை உருவாக்குவதில் அடிப்படையாகும், அங்கு பணியாளர்கள் மதிப்பு, மரியாதை மற்றும் உந்துதல் ஆகியவற்றை உணர்கிறார்கள்.

நன்றியுணர்வின் முக்கியத்துவத்தை வலுப்படுத்துவதற்கு ஆண்டு முழுவதும் பாராட்டு கலாச்சாரத்தை வளர்க்கும் கிக்ஸ்டார்ட் முயற்சிகளுக்கும் ஊழியர் பாராட்டு தினம் ஒரு முக்கிய தருணமாக செயல்படுகிறது.

ஊழியர்கள் தங்கள் சக ஊழியர்களின் சாதனைகளைப் பகிரங்கமாகப்

பாராட்டுவதற்கான தளங்கள் அல்லது சேனல்களை உருவாக்குவது பாராட்டு கலாச்சாரத்தை வளர்ப்பதில் நீண்டதூரம் செல்லலாம்.

**முடிவுரை:**

ஒரு கட்டத்தில், இந்த மிக முக்கியமான வணிகச் சமன்பாட்டின் இரு பக்கங்களையும் அங்கீகரிப்பதை ஊக்குவிப்பது நல்லது என்று எண்ணம் வெளிவரத் தொடங்கியது. எனவே இதை நினைவில் கொள்ள தேசிய ஊழியர் பாராட்டு தினம் உருவாக்கப்பட்டது.



# பெண் !

நி.சாக்கியா, பி.சி.எ.,
கணினி பயன்பாட்டியல் துறை,
வேல்ஸ் பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை-117.

பெண்ணே நீ ,
கலங்குவதற்கு பிறக்கவில்லை!
கதிரவனாய் ஒளி வீச
பிறந்தவள் !

மற்றவர்கள் நிழலில்
நீ வாழ பிறக்கவில்லை!

உன் நிழலில் மற்றவர்கள்
வாழ பிறந்துள்ளாய்!

ஓர் ஆணுக்குப் பின்னால்
பெண் என்பதற்காகவா
நீ பிறந்துள்ளாய் ?
இல்லை.. இல்லை..

ஆணுக்கு நிகரானவள் பெண்!
என்பதை மெய்ப்பிக்கும்
பிறவியே
பெண் என்னும் பேராற்றல்!

பேராற்றலும் போராடியே
காலம் கழிக்கிறது !

உலகை வெல்லும்
உயிராற்றலும் - ஓயாமல்
அலைகழிக்கப்படுகிறது !

ஏன் இந்த கொடுமை?

மண்ணில் விழுந்த விதைகள்
எல்லாமே மரமாவதில்லை !

பெண்ணினம் எல்லாமே
நல்வாழ்வு பெறுவதில்லை!

என்று தணியும் இந்த
போராட்டம்!

மலர்வதற்கு முன்பாகவே
அரும்பிலேயே கசக்கிப் பிழியும்
கயவனைக் கொன்று குவிக்க
ஆற்றல் தா ! பேராற்றல் தா!
போராற்றல் இந்த
பெண்ணினத்துக்கே தா !

அப்பொழுது
கொண்டாடுகிறோம்
உலக மகளிர் தினம்!



# பெண்ணின் கண்கள்!

த.தா.விசாலி, பி.சிஎ.,
கணினி பயன்பாட்டியல் துறை,
வேல்ஸ் பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை -117

கருநிறம் பதிந்த இரு குளங்கள் !
இருண்ட விழியில் இருளாத
மேகங்கள்!

அலைகடல் நீரும் குத்தகை கேட்கும்..
அவளது இரு விழிகளில் குடியேற..!

அகன்ற வானமும் நீல மையிடும்
அவளது நீண்ட விழிகளுக்கு!

வரண்டு போன மனதையும்
வருட வரும் தூரிகைகள்
அவளது இரு கண்கள் !

ஆழியலை உவர் நீரும் உவந்து
வந்து விழியாலே வழி கேட்கும்!

விழியும் வழி மொழியும்...
என் நினைவை ஏந்திய அவளது
மனதை அளந்து பார்க்க..!

கண்கள் பேசிக் கொள்ள
வார்த்தைகள் மௌனமாகியது !

உள்ளங்கள் ஏந்திக் கொள்ள
உலகமே எனக்கென்று ஆனது !

# மகளிர் தினம் எதற்கு?

பா.ரா.சிவானி,
பி.காம்., இளங்கலை
முதலாமாண்டு,
வேல்ஸ் பல்கலைக்கழகம்,
பல்லாவரம், சென்னை -117.

தனித்துவம் பெற்ற சூரியனும்
அவள் தானே ! நிறைவான
பூரணச்சந்திரனும் அவள்தானே !

தனியொரு சூரியனாய் உதிப்பாளே !
புதுப் புது விடியல் நோக்கி நடப்பாளே!
கையில் தேநீர் கோப்பைக் கொண்டு
கடந்து வந்த பாதையை நினைப்பாளே !

இன்னிசை போல இருப்பாளே!
மெல்லிசையாய் மனதை
வருடுவாளே !

கூந்தலிசையில் கோமகனையும்
வீழ்த்துவாளே !
வாளிசையில் வானுயர வெல்வாளே !

எத்திசையும் அவள் குரல் தானே!
எங்கெங்கும் அவள் நிழல் தானே!

அவள் கனவாய் அவளே நின்றாளே!
அவள் நினைவை அறிவாய் வெல்வாளே!

மின்னலைப் போல் ஒளிர்வாளே !
கோபத்தில் கூட நகைப்பாளே !

வலியையும் உளியாய் உணர்வாளே !
வலிகள் தாங்கும் பயணத்திற்கு
முடிவு தான் உண்டா ? சொல்லடி
கண்மணியே!
இந்நிலை என்று தான் மாறுமோ ?

கண்ணான கண்மணியை ....
காலில் போட்டு பொசுக்கும்
தீயில் சுட்டெரிக்கும் கயவர்கள்
நிலைக்கு தீர்வு தான் வருமோ ?

சொல்லடி சிவசக்தி! சுடரொளியாய்
எங்களைப் படைத்ததும் தான் ஏனோ ?

சுட்டும் விழியில் காமக் கொடூரனை
அழிக்கும் வல்லமை எனக்கு தாராயோ ?

# முத்தமிழ்

வெ. சக்திவேல்
BA LLB B
Law Deparment
VISTAS

இந்த பூமியில் பிறந்த முதல்மொழி
படிக்க படிக்க இனிக்கும் நெல்லிக்கனி
குமரிக்கண்டத்தில் பிறந்த என் தமிழ்த்தாயே
உம்மை ஒப்பிடுவதற்கு ஈடுயினை
இல்லையே சங்ககால  இலக்கியங்களும்,
காப்பியங்களும் நூறு தமிழைப்போல்
வேறு எந்த மொழியும் இல்லைப் பாரு
கோவில் கல்வெட்டுகளில் பதிந்து இருக்கும்
தமிழின் சிறப்பு ஜென்ம ஜென்மமாய்
அழியாத குறிப்பு வள்ளுவன்,
மகாகவி என பலசான்றோர்களின் எழுத்து
அதைப்படித்து நம் வாழ்வியளின் தலை நிமிர்த்து
ஏழுகடல், ஏழுமலை தாண்டி ஓங்கி நிற்கும்
தமிழின்பெருமை
தமிழர்களால் செதுக்கிய சிற்பம் ஆகும்
தீக்குச்சி திசை கீழ்நோக்கி பிடித்தாலும்
மேல் நோக்கியே ஏறியும்
தமிழை யாரும் அழிக்க நினைத்தால்
காடுத்தீயாய் சுற்றிப் பரவும்
தமிழே உன்னை எவ்வித வார்த்தைகளால் வாழ்த்துவது
ஏனின் என்றுமே நீ திகட்டாத திருமொழி ஆவாய்

# பெண்மையை மதியுங்கள்

ச. ம. கீர்த்திகா, பி.எஸ்.சி.
கணினி அறிவியல் முதலாமாண்டு

பெண்மையை மதியுங்கள் !
சேய் என்று தொடங்கியவள்!
மகள் என்று வளர்ந்தவள்!
மங்கை என்று மாறியவள்!
காதலி என இடம் பெற்றவள்!
மனைவி என பட்டம் பெற்றவள்!
அம்மா அன்று பதவி உயர
அம்மம்மா என்று முடிசுட்டப்பட்டவள்!

பிறந்தால் லக்ஷ்மி!
சமைந்தாள் குமரி!
வளர்ந்தாள் துர்கை!
தாயின் சேமாக உருவாகி
சேயின் தாயாக உறவாகி
வானில் வானவில்லாய்
நீரில் தாமரையானவள்!
மேகத்தை சீறும் விமானியவள்!
கடற்படையின் தலைவியவள்!
நிலத்தின் வீராங்கணையவள்.!
மாணவர்களுக்கு ஆசிரியரவள்!
நோயாளிகளுக்கு மருத்துவரவள்!
வயிற்று பசியைப் போக்கும்
அன்னலட்சுமி அவள்!
இவ்வாறெல்லாம்
பலப்பல பேசுவான்!
இவனே தான்,
விதவை, மலடி, தாசி
என பட்டங்களையும் அளிப்பான்!
மனிதா! நீ போற்றாவிட்டாலும்
பரவாயில்லை! பயிலாத பாடத்திற்கு
பட்டங்களை அளிக்காதே!
பெண்மையின் தாய்மையை
உணருங்கள்! அவளை முதலில்
மனிதனாய் மதியுங்கள்!

# உலக நுகர்வோர் உரிமைகள் தினம்

பா. பவித்ரா
BBA LLB (Hons) 1st Year
[ World consumer rights day]

உலக நுகர்வோர் உரிமைகள் தினம்
நுகர்வோரின் வரலாறு
நுகர்வோர் உரிமைகள்
நுகர்வோர் உரிமைகளின் முக்கியத்துவம்
நுகர்வோர் உரிமைகளின் வகைகள்
இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
நுகர்வோரின் முக்கிய கூறுகள்
நுகர்வோரை போற்றிப் பேணுகின்ற உரிமைகள்
நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் செயற்பரப்பு எல்லை
நுகர்வோர் சட்டம் பொருந்தாத நிலைகள் உதாரணம்
நுகர்வோர் குறைதீர் முகமைகள்.
தேசிய நுகர்வோர் கட்டமைவு
நுகர்வோர் முறையீடு

**உலக நுகர்வோர் உரிமைகள் தினம்**

உலக நுகர்வோர் உரிமைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு 15ஆம் தேதி உலக நுகர்வோர் உரிமைகள் நாள் (world Consumer Rights day) ஆகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் மார்ச்சு மாதம் 15ஆம் பெரிய அளவில் கொண்டப்படுகிறது.

**வரலாறு :**

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் எப் கென்னடி, அமெரிக்க பாராளுமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாகவும் நுகர்வோர் உரிமைகள் சட்டம் தொடர்பாகவும் ஆற்றிய முக்கிய உரை 1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் தேதி இடம்பெற்றது. அவ்வுரையே உலக அளவில் ஒரு நாட்டுத் தலைவர் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக ஆற்றிய முக்கிய உரையாகக் கணிக்கப் படுகின்றது அதே வேளை நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாகக் கரிசனை முதலாவது நாட்டுத் தலைவராக ஜோன் எப். கென்னடி கணிக்கப்படுகின்றார் 1962ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ஆம் தேதி இடம்பெற்ற அவ்வுரை உலக அளவில் பாரிய அலைகளைத் தோற்று வித்தது. அதன் விளைவாக 1962ஆம் ஆண்டு, ஒவ்வொரு வருடமும் மார்ச்சு மாதம் 15ஆம் தேதியை உலக நுகர்வோர் உரிமைகள் நாள் ஆகப் பிரகடனப்படுத்தி அறிவிக்கப்பட்டது அதற்கு அடுத்த ஆண்டு அதாவது 1963ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு வருடமும் மார்ச்சு மாதம் 15ஆம் தேதி உலக நுகர்வோர் உரிமைகள் நாள் ஆக அனுட்டிக்கப்படுகின்றது

**நுகர்வோர் உரிமைகள்:**

நுகர்வோர் பொருட்களையும், சேவைகளையும் நுகரும் போது அவர்களுக்கு உள்ள உரிமைகளே நுகர்வோர் உரிமைகள் (Consumer rights) ஆகும் காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட வகையில் நுகர்வோர் உரிமைகள் வகைப்படுத்தி கூறப்பட்டு வருகின்றது இத்தகைய நுகர்வோர் உரிமைகளை முன் வைத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அல்லது நிறுவனங்கள் வருமாறு :

**நுகர்வோர் உரிமைகளின் முக்கியத்துவம்**

நுகர்வோர் பொருட்கார் சேவைகளை விலையினூடாகவே நுகர்வு செய்கின்றார் இதனால் திருப்தியளித்தல் வேண்டும் நுகர்வோர் திட்டமிட்டு பொருட்களைக் கொள்வனவு செய்வதை ஊக்கவித்தல் போட்டியான சூழலில் நுகர்வோர் பாதுகாக்கப்படுதல் வேண்டும் நுகர்வோரது உடல், உள நலம் பாதிப்படயாதவாறு திருப்தியளிக்கப்படல் வேண்டும் நுகர்வோர் அரிமைகளின் வகைகள் கென்னடியின் அடிப்படை நுகர்வோர் உரிமைகள் சர்வதேச நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் சம்மேளனத்தின் அடிப்படை நுகர்வோர் உரிமைகள் இந்திய நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் போன்று பல உள்ளன.

**இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்;**

இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 இந்தியாவில் வாமும் மக்களின் நுகர்த் தன்மைகள் பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசால் ஏற்படுத்தப்பெற்றச் சட்டமாகும். டிசம்பர் 1986, 1987 முதல் இச்சட்டம் அமலுக்கு வந்தது இச்சட்டம் 1991 மற்றும் 1993இல் திருத்தச் சட்டங்களாக வெளிவந்தன. நுகர்வோர் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் விதமாகவும், அதன் செயற்பாடுகள், முக்கியத்துவங்கள் அதிகரிக்கப்பட்டு டிசம்பர் 2002இல் புதிய திருத்தக்கப்ப்டுத் திருத்தச்சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, மார்ச் 15, 2003 புதிய பரிமானங்களுடன் வெளியிப்பட்டு அபலுக்கு வந்தது.

இதன்படி வடிவமைக்கப்பட்ட விதிகள் நுகர்வோர் பாதுகாப்பு விதிகள், 1987 என அழைக்கப்படுகின்றன. இந்த விதிகள் மார்ச் 5, 2004 முதல் நாட்டுக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

**நுகர்வோரிள் முக்கிய கூறுகள்:**

இச்சட்டம் மத்திய அரசால் விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளைத் தவிர ஏனைய எல்லா பொருட்களுக்கும், சேவைகளுக்கும் இச்சட்டம் பொருந்தும். அனைத்துறையின் எதுவாயினும் தனியார் மற்றும் பொதுத்துறை மற்றும் கூட்டுறவு நிறுவனம் அல்லது தனி நபர் இவை யாவரையும் கட்டுப்படுத்தும் இச்சட்டம் வகுத்துள்ளதின்படி இவர்கள் நட்ட ஈடு வழங்க அதே சமயத்தில் தடை செய்யவோ, தண்டணை வழங்கவோ வழி செய்கின்றது.

**நுகர்வோரை போற்றிப் பேணுகின்ற உரிமைகள்:**

உடலுக்கும், உளயர்கும் தீங்கு விளைகின்ற வகையில் வணிக நோக்கில் விற்கப்படும், பொருட்கள் மறிறும் சேவைகளிடம் நுகர்வோர் தாங்களை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.

பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம், எடை, வீரியம் கலப்படமற்ற, தரநீர்ணயம் மற்றும் விலை அறிந்து கொள்ளவும், நேர்மையற்ற வணிகத்தினரிடமிருந்து நுகர்வோர் தங்களை தற்காத்துக் கொள்ளும் உரிமை மலிவு அல்லது போட்டி விலைகளில் கிடைக்கும் பலதரப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்த நம்பகத்தன்மையை நுகர்வோருக்கு உறுதிபடுத்துதல் உரிமை. நேர்மையற்றை வணிகத் தொழிலினால் அல்லது மனச்சாட்சியற்ற சுரண்டல்களினால் ஏற்பட்ட பாதிப்பினால் நுகர்வோர் குறைதீர்க்கும் மையத்தை நாடும் உரிமை.

**நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் செயற்பரப்பு எல்லை:**

இந்த சட்டம் இந்தியாவில் உள்ள அனைந்து மாநிலங்களுக்கும் பொருந்தும். ஆனால் ஜம்மு- காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றுக்கு மட்டுமே இந்தச் சட்டம் பொருந்தும். இந்திய அரசு அறிவிப்பில் குறிப்பிட்ட சில பொருள்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

தனியார் துறை, பொதுத்துறை. கூட்டுறவுத்துறை போன்றவைகளும் இச்சட்டம் பொருந்தும்.

**நுகர்வோர் சட்டம் பொருந்தாத நிலைகள்:**

வாங்கிய பொருளை மறு விற்பனை செய்தல் அல்லது இலாபம் ஈட்ட வேண்டும் என்கிற நோக்கத்துக்கு வாங்கப்பட்ட பொருள். இலவசமாக பெற்ற பொருள் அல்லது இலவச் சேவை.

**உதாரணம்:**

அரசு மருத்துவமனைகளில் பெறும் இலவச மருத்துவ சேவை இலவச அனுமதியளிக்கும் திட்டங்களில் பெறும் சேவை குறைபாடுகளுக்கு இச்சட்டத்தின்படி வழக்கு தொடர முடியாது.

**நுகர்வோர் குறைதீர் முகமைகள்:**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 பிரிவு 9இன் கீழ் இந்தியாவில் மூன்று நிலையிலான முகமைகள் செயல்படுகள். மாவட்டக் குழு கீழ்நிலையில் செயல்படுகின்றது இது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் என அழைக்கப்படுகிறது. இம்மன்றத்தில் 20 இலட்சம் ரூபாய் வரையிலான நஷ்ட ஈடுக்கான வழக்குகள் மட்டும் இங்கு நடத்தப் பெறும். மாநிலக் நுகர்வோர் குறைதீர் மன்றமும் இதனை போன்று தேசியக்குழு உச்சநிலையில் செயல்படு இது தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் என அழைக்கப்படுகிறது. இங்கு 100 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான நஷ்ட ஈடுக்கான வழக்குகள் இங்கு நடத்தப்பெறும்.

**தேசிய நுகர்வோர் கட்டமைவு:**

தேசிய நுகர்வோர் ஆணையம் 1988ஆம் ஆண்டில் கட்டமைக்கப்பட்டது. இதன் தலைமை பொறுப்பை அமர்வு அல்லது ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஏற்றிருப்பார்.

தற்பொழுது தலைமை பொறுப்பை ஏற்றிருப்பவர் நீதியரசர் அசோக் பான். இவர் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவார். இவர் தலைவராகவும் அவருடன் கூடிய ஒன்பது பேர் உறுப்பினர்களாகவும் உள்ளளர்

**மேல்முறையீடு :**

நுகர்வோருக்கு மாவட்ட ஆயத்திள் தீர்வு திருப்தியளிக்கவில்லையென்றால் மேல்முறையீட்டுக்கு மாநில ஆண்ணையத்தை அணுகலாம். அதிலும் திருப்தியளிக்கவில்லை யென்றால் தேசிய ஆணையத்தை அணுகலாம்.

**முடிவுரை:**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986இன் படி இந்தியாவில் நுகர்வோருக்கு ஏற்படும் குறைகள் மற்றும் பூசல்களைகளையும், நேர்மையற்ற, சட்டங்களின் பின்னல் தொடங்கப்பட்டது. இச்சட்டம் நுகர்வோரின் துயர்களைத் துடைக்கும் பொருட்டு மற்றும் அதற்கான வடிவமைக்கப்பெற்ற சட்டத்தை அமல்படுத்தியாது! நுகர்வோர் உரிமைகள்.



# சுயநலமாக இருக்கும் மனிதர்கள்

பவதாரிணி செ
B.E., BLLB 1St year

மண்ணில் தெரியுது வானம்!
அழகான, அள்ள அள்ள குறையாத நம்
கடல் மாதாவை முத்தமிட்டு கொண்டே
மண்ணில் தெரியுது வானம்!

பசியால் வாடிய ஏழைக்கு ஒரு வேளை உணவு கொடுத்தேன்
அவன் கண்களில் கண்ணீர்
முகத்தில் புன்சிரிப்பு எனக்கோ
மண்ணில் தெரியுது வானம்!

ஒரு அழகான ரோஜா செடிக்கு,
தண்ணீர் ஊற்றி வளர்தேன்
ஆன்றோர் நாள் அது ஓர் அழகான
பூ பூத்தது எனக்கோ
மண்ணில் தெரியுது வானம் !

கத்திரி வெயிலில் பயிர்கள் வாட,
ஜீவராசிகள் அணைத்தும் வாட,
துளித்துளியாய் மழைநீர் மண்ணில் விழ,
மண்ணில் தெரியுது வானம்!

நாட்டுக்காக உழைக்க ஒரு வீரமகனை
அனுப்பிய தாய்க்கு, அவன் போரில்
வெற்றி கண்ட பொழுது,
மண்ணில் தெரியுது வானம்!

சுயநலமாக இருக்கும் மனிதன்
பொது நலத்தோடு மாறி சுற்றத்தாரை
நேசிக்கு பொழுது, வண்ணில் தெரிந்த வானம்
மண்ணில் தெரியும் வானமாகும் உலகுக்கு

# மண்ணில் தெரியுது வானம்

**அ.அ.அனுகிரகா**
BALLB (HONS)-A se
இரண்டாம் பரிசு
புதுக்கவிதை

வானம் எட்டாத தூரம்
என்றது அந்த காலம்

தொட்டுவிடும் தூரம் தான்
என்றது என் பள்ளிப்பருவம் (பதின்பருவம்)

விண்ணைத் தாண்டி வேறுலகு காணலாம்
என்கிறது கல்லூரிக்காலம்

(எம்) கல்லூரி தந்ததோ கவிதை
மண்ணில் தெரியுது வானம்
மழைத்துளி மண்ணில் பட்டு
மண் மனக்கும் நல்வாசம்
வாசம் என் நேசம்
சேறான என் தேசம்

மாதம் மும்மாரி பெய்த
மழையால் செழித்தது காடு
காடும் நாடும் செரி(றி)ந்தால்
களி ஆட்டம் ஆடிய கூட்டம்

காடு மாண்டது காலம் மாறியது
(ஆம் காலம் மாறியது)
நூற்றாண்டுகளில் நினைவில் இருந்த
காடும் நாடும் இல்லை
காணுமிடம் எல்லாம்
காடும் நாடும்இல்லை
கான்கிரீட் காடுகளும்,
கண்டெய்னர் தண்ணீரும்
மாடியில் சென்ற தோட்டமும்
விந்தையான மொபைல் மனித

நடமாட்டமும் கண்டு கொல்லாத (கொள்ளாத)
இயற்கையின் நேசமும் நாம்
காணாமல் போன மும்மாரி மழையும்
ஒரு நாள் மழையும், மிகை மழையும்
கட்டோடு மாறிய நம் தேசமும், உணவுப்பழக்கமும்

காலம் மாறிய கட்டுங்கடங்கா
காட்டாற்று வெள்ளமான அபாய அறிகுறியும்
நாம் தவறவிட்ட மண்ணில்
தெரியாத வானமும், மாற்றிடு தோழா
தண்ணீரில் வானம் தெரியும் படி

என் எண்ணங்கள்
இங்கு கவிதையாய்
அனுகிரகா அருள்நாதன்

பூமிக்கு இயற்கை அழகு!
அந்த இயற்கைக்கு பசுமை அழகு!
பசுமைக்கு மலர்கள் அழகு !
அந்த மலரைவிட நியே அழகு!
வானத்தில் மேகம் அழகு!
மேகத்தால் வரும் மழை அழகு!
மழையிலும் தோன்றும் நிலவு அழகு!
அந்த நிலவைவிட நீயே அழகு!
தவளும் வயது முதல் ...
தள்ளாடும் வயது வரை...
துணையாக இருப்பவள் அவள்!

இமை அசைய மறுத்த...
ஓவியம் அவள்!
காதல் கரை புரண்டோடும்...
காவியம் அவள்!
உலகப் புனிதத்தின் உச்சம் அவள்!
நான் ஏசித்து சுவைத்த மிச்சம் அவள்!

**ம. தேவிபிரியா**
இரண்டாம் ஆண்டு,
காட்சித் தொடர்பியல் துறை
மூன்றாம் பரிசு

என் எழுத்தாணிக்கு இலக்கணம் அவள்
யார் அவள்? யார்தான் அவள்!?
அவள் என் அழகுத்தமிழ்...
தமிழ் என உச்சரிக்கும் போடுது,
உடம்பெல்லாம் சிலிர்க்கிறது!
எண்ணுவதும் உன்னையே!
எழுதுவதும் உன்னையே!
உண்ணுவதும் உன்னையே!
உயிர்ப்பதும் உன்னையே!

வள்ளுவரின் திருக்குறளாய் ...
கம்பரின் இராமாயணமாய்…
இளங்கோவின் சிலப்பதிகாரமாய்...
அழகான உருவமெடுத்தாய்!!!

வானம் எவ்வளவு உயர்வானதோ?
அத்தகைய உயர்வானவள் நீ!
வானத்தின் உயரத்தை எவ்வாறு அளக்க இயலாதோ?
அவ்வாறே உன் புகழையும் அளந்தறிய இயலாது!
உன்னைவிட, உன் புகழை விட
வானம் ஒன்றும் பெரிதல்ல!
அந்த நிலவொளியை விட, உன் புகளொளி மிகையானது
நான் மண்ணில் கண்ட...
என் கண்ணில் தெரியும் வானம்...
என் "தமிழ்மொழியே!!

கோ. மணிதீபா
B.Tech Biotechnology
Nayeon

பச்சைப்பட்டாடை உடுத்தி எங்கும்
பரந்து கிடந்தவள்
கண்ணை கவர்ந்தவள் இப்போது
வெள்ளை கட்டடங்களாக
தெரிகிறாள்! என் தாய்திருமண்ணில்
எப்படி பயிர்கள்
இல்லையோ அதேபோல் கார்மேகங்கள்
இல்லா வானை காண்கிறேன்!
இரண்டிலும் வெறுமையை தவிர
வேறொன்றும் இல்லை
எண் தாய்திருநாட்டின் விரவிளையாட்டிற்காக
போராடிய இளைஞர்கள்
ஏன்? எங்கள் விவசாயிகளின் கண்ணிரை
துடைக்க வருவதில்லை
விண்ணில் செலுக்கிய ஏவுகனையை
ஏன்மண்ணில் பயிர்களாக
செலுத்தவில்லை ! இந்நிலை இப்படியே
நீடித்தால் எப்படி விளக்குவேன்
வரும் தலைமுறையினருக்கு
விண்ணிலிருந்து வரும் முதல்மழையின்
மண்வாசனையையும், மழைக்கு முன்னர்
வானில் தோன்றும்
தும்பிகளையும், வயல்வேலிகளிருந்து வரும்
வண்டுகளின் ரீங்காரங்களையும்
எம்மொழி கொண்டு விளக்குவேன்
சின்னஞ்சிறுகிழஇதழ்களை கொண்டு
சிரிக்கும் பச்சிளம் குழந்தைப்போல
மண்ணில் செழித்துவளரும்
பயிர்களை காணேன்!
விண்ணில் மழைக்களிகளை தரும்
கார்மேகங்களையும் காணேன்
மண்ணில் தெரியுது வானம்



# உறவுக்குக் கைக்கொடுப்போம்

மு.சத்யா,
பி.எட்., முதல் ஆண்டு

**முன்னுரை:**

“உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்" ஆதலால் உறவை மதிப்போம், உறவு என்பது உயிரினும் மேலாகக் கருதப்பட வேண்டியது. இது மூன்று எழுத்து என்று எண்ணாமல், உறவு என்பது மூன்று எழுத்து மந்திரம் என்றும், அதனால் ஏற்படும் நன்மைகள் என்னவென்றும் இனி நாம் இக்கட்டுரையில் காண்போம்.

**உறவின் நன்மைகள்:**

உறவு என்பது அனைத்து உயிகளுக்கும் உரித்தான ஒன்று. உறவினால் ஏற்படும் நன்மைகள் பல. அவற்றில் ஒன்று, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பது. அதாவது உறவினர்களிடையே ஒற்றுமை இருக்க வேண்டும். உறவினர்களுக்கு நாம் இயன்ற உதவிகள் செய்ய வேண்டும். அதனால் நம் உறவு மேலும் மேலும் வலுப்படும். முன்னோர்கள் நம் வாழ்வில் இருப்பது மட்டும் அல்லாமல், நம் குடும்பத்தில் ஒருவராகவும் இருக்க வேண்டும். தற்போது, இக்காலக்கட்டத்தில் உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே இல்லை. அப்படி கொடுக்கப்பட்டால் நம் நாட்டில், நம் சமுதாயத்தில் தனிக் குடும்பம் இல்லாமல் கூட்டுக்குடும்பமே காணப்படும்.

கூட்டுக்குடும்பம் என்றால் பல உறவுகள் உறவாடும் ஓரிடம். அதாவது, அப்பா, அம்மா, அண்ணண், அண்ணி, அத்தை, மாமா, தாத்தா, பாட்டி, சித்தப்பா, சித்தி என அனைத்து உறவினுடைய பாசமும், நேசமும் அங்குக் காணப்படும். குறிப்பாக, இக்காலக் கட்டத்தில் குழந்தைகள் உறவுகளுடன் விளையாட வழிகிடைப்பதில்லை. ஒருவேளை கூட்டுக்குடும்பமாய் இருந்தால்,

- ❖ குழந்தைகள் விளையாடுவதற்குத் தாத்தா, பாட்டி, மாமா, அத்தை அவர்களுடைய குழந்தைகள் என அனைவரும் விளையாடி குழந்தைக்கு உற்சாகத்தை அளிப்பார்கள்;
- ❖ குழந்தைகளும் ஆரோக்கியமாக வாழ்வதற்குச் சிரித்து வாழ நல்வழி கிடைக்கும்;
- ❖ குழந்தைகள் தனிமையில் இருப்பதைத் தவிர்க்கலாம்;
- ❖ குழந்தைகள் இரவில் கதைக்கேட்டு உறங்கும் ஒரு நிகழ்வும் இங்குக் கிடைக்கும்.

**உறவுகளுக்கு முக்கியத்துவம் வேண்டும்**

உறவு என்றாலே குறிப்பாகப் பெண்களுக்கு ஒரு வினாத்தாள் போன்று, அதற்குச் சரியான விடை அளித்தால் மட்டுமே உறவு வலுப்படும். இல்லையேல் மனச்சங்கடங்களும், குழப்பங்களும், கவலைகளும் மட்டுமே நிரம்பியருக்கும். ஆதலால், பெண்கள் மட்டுமல்லாமல் ஆண்களும் உறவினைப் பேணிக்காத்தல் வேண்டும். உறவின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். ஏனென்றால் இளமைப் பருவத்தில் பாசத்தைக் கொட்டி வளர்க்கப்படும் குழந்தைகள், முதுமைக் காலத்தில் நமக்குத் துணையாக இருப்பார்கள் என்று எண்ணியே தவிற நமக்குத் தீங்கு விளைவிப்பார்கள் என்று சிறிதளவும் எண்ணுவதில்லை. ஆனால் தற்போதுள்ள நிலைமை புதிய புதிய முதியோர் இல்லங்கள் உருவாவது மனதிற்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது.

நாம் பெற்ற பிள்ளைகள் நமக்கு உதவி செய்ய வேண்டும் என்று எண்ணுவதைவிட நாமும் ஒரு பெற்றோர்களுக்குப் பிள்ளைதான் என்று உணர்ந்து பெற்றோர்களைக் கைவிடாமல் இருந்தால் நாமும் நம் பிள்ளைகளால் ஆதரிக்கப்படுவோம்,

இல்லையேல்,

**"அரசன் அன்று கொல்வான்,**

**தெய்வம் நின்று கொல்லும்"**

என்ற வரிகளுக்கு உரித்தானபடி, முற்பகல் செயின், பிற்பகல் விளையும் என்பதற்கேற்ப, முற்காலத்தில் நீ என்ன செய்கிறாயோ. அதனையே பிற்காலத்தில் நீ அனுபவிப்பாய். அதாவது நீ நன்மை செய்தால், நன்மை கிடைக்கும். தீமை தீமை செய்தால் தீமை நடக்கும்.

அதனால், உறவின் முக்கியத்துவம் உணர்ந்து உணர்வுகளைப் பகிர்ந்து உறவுகளுக்குப் பாலமாய் உறவுகளுக்குக் கை கொடுத்து வாழுங்கள்.

**உறவுகளின் வலிமை**

முன்காலத்தில் உறவுகள் என்றால் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. இக்காலத்தில் கூடி வாழ்ந்தால் கோடி பிரச்சனைகள் என்பதைப் போல் மாறிவிட்டது. காரணம், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் இருப்பதும், பெரியோர்கள், அல்லது பிறருடைய வார்த்தைகளை அவமதிப்பதும் மட்டுமே. இப்போதெல்லாம் தனிக்குடும்பங்கள் பெருகி வருவதற்குக் காரணம் சகிப்புத்தன்மை இல்லாமையே.

ஒருவேளை மனிதர்களுக்குள் சகிப்புத்தன்மை இருந்திருந்தால், உறவுகள் வலிமையோடு இருந்திருக்கும். அப்படி வலிமை இருந்திருந்தால் இன்றைய காலகட்டத்தில் விவாகரத்துகளின் எண்ணிக்கை அளவே குறைந்திருக்கும். இதனால் கூட்டுக்குடும்பங்கள் நிலைத்து முதியோர் இல்லங்களின் எண்ணிக்கையும் குறைந்திருக்கும்.

**உறவுகளின் அவசியம்:**

வீட்டுக்கு வீடு வாசற்படி வேண்டும் என்பதுபோல வீடென்றால் நிச்சயம் ஒரு பெரிய தலை இருக்க வேண்டும். ஏனென்றால், நமக்கு நன்மை, தீமைகள் எடுத்துச் சொல்வதற்கு. ஆனால் அது பெரிய காரியம்தான். ஏனென்றால் இப்போதுள்ள பெற்றோர்களும் சரி, குழந்தைகளும் சரி முன்னோர்கள் சொல்லும் கருத்துகளுக்கு முரண்பாடாக நிற்கிறார்கள். அது தவறு. இக்காலக்கட்டத்தில் பெரியவர்களின் அவசியம் தேவை.

ஒருவேளை நாம் வெளியில் செல்ல வேண்டியிருந்தாலோ அல்லது கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் நிலையிருந்தாலோ, தங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பாக அரவணைக்க பாட்டிமார்கள் உள்ளனர், வேறென்ன கவலை.

அதுமட்டுமல்லாமல் கணவன் வெளியூர் பயணங்களுக்குச் சென்றுவிட்டால், தனிமையில் இருந்தால் மனைவிமார்கள் கயவர்களால் பாதிக்கப்படுவர். அவ்வாறு நிகழாமல் இருக்கக் கூட்டுக்குடும்பமாய் இருப்பது சிறப்பு. சில குடும்பங்களில் மாமியார் மருமகள் நகையும் சதையுமாய் இணைந்து இருப்பார்கள். அவர்களுக்கு எப்போதும் ஒரு தைரியம் இருக்கும். எப்படியென்றால் அம்மா போல மாமியார், அப்பா போல மாமனார், அண்ணன், தம்பி போல மைத்துனன்கள் என அனைவரும் உறுதுணைமாய் இருப்பர். அதனால்தான் பெண்களுக்கு இரண்டு அம்மா, இரண்டு அப்பா என்று கூறுவார்கள். அதற்கு நாம் அவர்களோடு அவர்களின் கருத்திற்கு இணங்க வாழ்ந்தாலே போதும்.

**உறவுகளுக்கு உதவுங்கள்:**

நம் குடும்பத்திலுள்ள இரத்த சொந்தங்களே உறவுகள் ஆகும். ஆகையால் நம் சொந்தம் என்று வார்த்தைகளால் மட்டுமே கூற வேண்டாம். செய்கையாலும் செய்து காட்டுவோம். எப்படியென்றால் நம் தாய் தந்தையர்க்கு முடியாத பட்சத்தில் அவர்களுக்கு உதவுங்கள். அண்ணன், தம்பி, தங்கை ஆகியோருக்கு ஒரு நல்ல தோழனாக இருங்கள். அவர்களுக்கு கஷ்டம் அல்லது துன்பம் நேரும் காலங்களில் துணையாக இருங்கள்.

**முடிவுரை:**

உறவுக்குக் கை கொடுப்போம் என்றால் உதவி செய்வோம் என்பது பொருள். இந்நிலையில் ஒருவருக்கொருவர் வாய்விட்டு மனம் திறந்து பேச வேண்டும். குடும்பத்தில் உறவுகள் வலுவாக இருக்க வேண்டும். குடும்பத்தில் ஒற்றுமை காணப்பட்டால்தான் இந்தச் சமுதாயத்திலும் ஒற்றுமை காணப்படும். உறவுகள் வலுப்பெற, உணர்வுகள் திறம்பட உதவுவோம். நாம் பிறருக்கு உதவினாலே யாவராக இருந்தாலும் அங்கு உறவுகள் மலரும். வாழ்க்கை செழிக்கும். வாழ்க பாரதம்! நன்றி!!

நீண்ட பயணம் நெடு நேர மௌனம்.

கடந்து செல்லும் மரம் .... ஓடும் மனம் தேடும் மனிதம்!

வருடங்கள் உருண்டது.

வசதிகள் வளர்ந்தது.மனிதம் தேய்ந்தது.

மக்கள் மாக்கள் ஆகினர்! பணம் பாடமானது....

பாடம் பட்டமானது....பட்டம் தம்பட்டமானது!

காகித பூக்கள் மணம் தரா யார் இவர்கள்?


காகித பூக்கள் மனம் தரும் மானம் தரும்

மகிமை தரும் மகிழ்ச்சி தரும் மற்றன


எல்லாம் தரும் விலையாக... மனிதம் !



# இயற்கையை அழிக்காதே!


புவி வெப்பமாதல்
பிளாஸ்டிக்கை கை விடு!...
துணிப்பையை கையில் எடு!...






Scanned with OKEN Scanner



# உலக வன நாள்!

பா.ரா.சிவானி, பி.காம்.(சி.எ)

இளங்கலை முதலாமாண்டு


பொருளடக்கம்: முன்னுரைவனத்தின் முக்கியத்துவம்ப சுமையான காடுகளின் இழப்புபாதுகாப்பு முயற்சிகள் முடிவுரை

முன்னுரை:

உலக வன நாள் ஆனது மார்ச் 21-ஆம் தேதி அன்று ஆண்டிற்கு ஒருமுறை கொண்டாடப்படுகின்றது. பூமியில் உயிர்களை நிலைநிறுத்துவதில் காடுகள் மற்றும் மரங்களின் முக்கியத்துவம், அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலுக்கும், மனித நல்வாழ்வுக்கு அவை வழங்கும் பல்வேறு நன்மைகளை முன்னிலைப்படுத்தவும் இந்த நாளை கொண்டாடும் நோக்கம் ஆகும். உலகின் வன வளத்தை பாதுகாக்கவும், அதனைப் பற்றிய விழிப்புணர்வை உலகளவில் உணர்த்தவுமென, ஐக்கிய நாடுகள் பொது அவை, 2012ம் ஆண்டில், மார்ச் 21ம் தேதியை உலக வன நாளாக கொண்டாடத் தீர்மானித்தது.வனத்தின் முக்கியத்துவம்: வனம் பல்வேறு வகையான விலங்குகள்,தாவரங்கள், மேலும் பல நுண்ணுயிரினங்களின் வசிப்பிடமாக திகழ்கின்றது.பல்லுயிரியலைப் பாதுகாப்பதிலும், மரபணு வளங்களைப் பாதுகாப்பதிலும், சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுவதிலும் காடுகள் முக்கியப் பங்கு

வாழும் உயிரினங்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு காடுகள் மிகவும் பங்களிக்கின்றன.பசுமையான காடுகளின் இழப்பு: வெப்பமண்டலக் காடுகள், உலகில் வாழும் ஐம்பது விழுக்காட்டு உயிரினங்களுக்கு உறைவிடமாக விளங்குகின்றன. உலக நிலப்பரப்பில் 30 விழுக்காட்டு அளவுக்கு காடுகள் உள்ளன. இதில் 60 ஆயிரம் தாவர வகைகள் உள்ளன. இதில், இந்தியாவில் ஏறத்தாழ 24 விழுக்காட்டுப் பகுதி, காடுகள் மற்றும் மரங்களால் சூழப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 17.59 விழுக்காட்டு பகுதியில் காடுகள் அமைந்துள்ளன. இந்தியாவில் உள்ள தாவரங்களில் மூன்றில் ஒரு பகுதி தமிழக வனங்களில் உள்ளன.ஆயினும், தற்போது காடுகள் பல வழிகளில் அழிக்கப்படுவதால் ஏற்படப் போகும் ஆபத்துகள் கடுமையாக இருக்கும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.பாதுகாப்பு முயற்சிகள்: 'நமது மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனங்கள் இருக்க வேண்டும்' என இந்திய வனக் கொள்கைகள் (1952- 1988) பறைசாற்றுகின்றன. அதற்கு மாறாக இந்திய வனப்பரப்பு மொத்த பரப்பில் 20 சதவீதத்திற்கும் குறைவாகவே, கடந்த 50 ஆண்டுகளாக இருக்கின்றன. பரந்து விரிந்துள்ள தரிசு நிலங்களுக்கு ஏற்ற உத்தியை கையாளவேண்டிய நிலையிலும், அழிந்து வரும் காடுகளின் நிலையிலிருந்து மீளவும் மர வளர்ப்பு அவசியம்.அதற்காக, அரசு, தனியார் நிலங்கள், வெற்றிட நில பகுதிகளை, பசுமைநில பகுதிகளாக மாற்ற, அனைவரும் பாடுபட வேண்டும்.உயிர்களை நிலைநிறுத்துவதில் காடுகளின் முக்கிய பங்கை உணர்ந்து, உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள், அமைப்புகள் மற்றும் சமூகங்கள் பல்வேறு பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இந்தியா தனது காடுகளைப் பாதுகாக்க பல வனப் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றியுள்ளது. இந்திய வனச் சட்டம், 1927 மற்றும் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980, வன நிலத்தைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் காடழிப்பு, சுரங்கம் மற்றும் வனமற்ற நோக்கங்களுக்காக வன நிலத்தைத் திசைதிருப்பல் போன்ற நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கிறது.காடுகளை அதிகரிக்கவும், சிதைந்த வன நிலங்களை மீட்டெடுக்கவும் காடு வளர்ப்பு மற்றும் காடு வளர்ப்பு திட்டங்களை இந்தியா மேற்கொண்டுள்ளது.

தேசிய காடு வளர்ப்பு திட்டம் (National Afforestation Program) மற்றும் பசுமை இந்தியா மிஷன் (Green India Mission ) போன்ற முயற்சிகள் மரங்களின் பரப்பை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.முடிவுரை: நேற்றைய மரங்களை பாதுகாப்போம் இன்றைய மரங்களை பராமரிப்போம் நாளைய மரங்களை பதியமிடுவோம் - மரமொழி.உலக வன தினம் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதிலும், காலநிலை மாற்றத்தைத் தணிப்பதிலும், நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதிலும் காடுகளின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது. நிகழ்கால மற்றும் வருங்கால சந்ததியினரின் நலனுக்காக காடுகளை பாதுகாக்கவும், நிலையான முறையில் நிர்வகிக்கவும் கூட்டு நடவடிக்கைக்கு அழைப்பு விடுக்கிறது. காடுகளைப் பாதுகாப்பதன் மூலமும், அவற்றின் நிலையான பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலமும், அனைவருக்கும் பசுமையான, ஆரோக்கியமான கிரகத்தை உறுதிசெய்ய முடியும்.எனவே,மரம் வளர்ப்போம்! வளம் அடைவோம்!



# ஆள்பாதி ஆடைபாதி

“ஆள்பாதி ஆடைபாதி" என்ற பழமொழி whatsAPP பாதி Instiagram மீதி" என்றாகிவிட்டது. சமூகவலைதளங்கள் பெண்களுக்கு சாதகமா? பாதகமா? என்று கேட்டால் 50/50 பிஸ்கட் மாதிரி இனிப்பான சாதகமும், காரமான பாதகமும் உள்ளது. அந்த 50% நாம் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்தது. அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

சமூகவலைதளங்கள் பெண்களுக்கு சாதகமானதுதான். காரணம் எதுவெனில், ஒரு பெண் தன் கூச்சசுபாவங்களை உதரிதள்ளிவிட்டு திறமைகளை வெளிக்கொணரும் இடமாக சமூகவலைதளங்களை பயன்படுத்துகிறாள். அதன் மூலமாக வருமானத்தையும் பெறுகிறாள். உதாரணமாக, சமையல் சேனல்கள், மேக்கப் ஆர்டிஸிட், அழகுக்குறிப்புகள் எனக் கூறிக்கொண்டே செல்லலாம். சோஷியல் மீடியாவை நல்ல விதமாக பயன்படுத்தி ஹிட் அடிப்பவர்களும் இருக்கிறார்கள். தவறாக பயன்படுத்தி விணானவர்களும் பலர். சுருக்கமாக கூறினால் சமூகவலைதளங்களில் இல்லாதவைகளே இல்லை எனக் கூறலாம். உடல்நிலை சரியில்லையா ? பாட்டி வைத்தியம் (அ) டாக்டரின் அறிவுரை. பொருளாதாரத்தில் முன்னேற வேண்டுமா? அதற்கும் இருக்கவே இருக்கிறது ஒரு வீடியோ. சமையல்கலை தெரியவில்லையா? யூடியூப், இன்ஸ்டாகிராம் என எதைத்திறந்தாலும் சமையல் வீடியோ. புடவை அணியத் தெரியவில்லையா? புடவை அணிவது எப்படி என அனைத்திற்கும் ஒரு வீடியோ. சோஷியல் மீடியாவில் இல்லாதவைகளே இல்லை. இவை அனைத்தையும் மீறி கல்வி கற்க இயலாதவர்கள் எளிமையாக கல்வி கற்க, சமூகவலைதளங்கள் ஒரு உந்துகோளாக உள்ளது. பெண்கள் ஏதாவது பேராபத்தில் சிக்கிக்கொண்டால், அவர்களை காப்பாற்றிக் கொள்ள Instagram (அ) facebook இல் Live வருகிறார்கள். இதன்முலம் அவர்கள் இருக்கும் இடத்தை எளிமையாக கண்டறிந்து காப்பாற்றிவிட முடியும். அது மட்டுமன்றி

ஒரு பெண்ணால் சமூக வலைதளம் மூலம் நேரடியாக மாவட்ட ஆட்சியரை தொடர்பு கொள்ளமுடியும், அரசாங்கத்தை தொடர்பு கொள்ள முடியும். ஒருவருக்கு சாலைவிபத்து ஏற்படுறைது என்றால், அவர்களின் உறவினர்கள் ஓடி வருகிறார்களோ, இலலையோ? ஜோஷியல் மீடியா நண்பர்கள் ஒடோடி வந்துவிடுகிறார்கள். அந்த அளவிற்கு நெருப்பை விட வேகமாக சோஷியல் மீடியாவில் செய்திகள் பகிரப்பட்டு மக்களை சென்றடைகிறது. எத்தனை நன்மை இருந்தாலும் தீமைகளும் மிகையாக உள்ளன.

நல்லவை என ஒன்று இருந்தால் தீயவை என ஒன்று நிச்சயம் இருக்கும். அது இயற்கையின் நியதி. ஒரு பெண் வெளிர் நிறத்தில இருந்தால் cute... beauty என கமெண்ட் பண்ணும் இந்த சமுதாயம், ஒல்லியாகவோ, (அ) உடல் பருமனாகவோ இருந்தால் கேலிக்கையாக சித்தரிக்கிறது, விமர்சனங்களைச் செய்கிறது. இத்துனைத் தடைகளையும் தாண்டி வெற்றி பெற்ற, வெற்றிபெறுகின்ற பெண்களும் உள்ளனர்.

என்னைப் பொறுத்தவரையில் சமுகவலைதளவிகள் பெண்களுக்கு பாதகமானது இல்லை. பெண்கள்தான் அதை பாதகமாக்கிக் கொள்கின்றனர். இந்த சமுதாயத்தை பொறுத்தவரையில் அனைத்தும் குற்றமே. மேக்கப் பண்ணினாலும் குற்றம் பண்ணவே இல்லை என்றாலும் குற்றம். முழுமையான ஆடை அணற்றிருந்தாலும் குற்றம், அணியாவிட்டாலும் குற்றம். சோஷியல் மீடியாவில் இருந்தாலும் குற்றம், இல்லாவிட்டாலும் குற்றம். இதையெல்லாம் பெரியதாக எண்ணாமல் சாதித்த பெண்கள் அறிவுமாகவே உள்ளனர். Like க்குகாக அநாகரீகமான புகைப்படங்கள் (ம) வீடியோக்களை பதிவிடும் பெண்களும் இச்சமுதாயத்தில் உள்ளனர். உலலை எந்த முலையில் ஒரு

சம்பவம் நடந்தாலும் உடனடியாக நமக்கு தகவல் கிடைக்கிறது. என்றால், அதற்கு முழுமையான காரணம் சோஷியல் மீடியா. பக்கத்து வீட்டில் நடக்கும் நிகழ்வைக்கூட சோஷயல்மீடியா மூலம்தான் தெரிந்துகொள்கிறோம். அந்த அளவிற்கு நம் ஒவ்வொடுவரின் வாழ்க்கையிலும் சமூகவலைதளங்கள் ஒரு அங்கமாக விளங்குகின்றன.

எவ்வளவு தீமை இடுந்தாலும் பெண்கள் சோஷியல் மீடியாவை சரியாக பயன்படுத்தினால் அதைவிட மிகப்பெரிய வலிமையான ஆயுதம் வேறெதுவும் இல்லை. சமூகவலைதளம் "குப்பைகளும், அறிவுக்கிடங்குகளும்" கொட்டிக்டைக்கும் ஒர் இடம். அதை தேர்ந்தெடுப்பதைப் பொறுத்துதான் நன்மையும் தீமையும் தீர்மானிக்கப்படுகிறது. சரியும், தவறும் நிறைந்ததுதான் இந்த சமூகம்.

எல்லாமும் சரி, எல்லாமும் தவறு என்று கூற முடியாது. எதைத் தேர்வு செய்கிறோம், தேர்வு செய்றதை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதுதான் மிக முக்கியம். சமூகவலைதளம் என்பது கோடானகோடி அறிவுசார்ந்த( அ) சமூகம் சார்ந்த விசயங்களையும் கருத்துக்களையும், திறமைகளையும் வெளிப்படுத்தும் ஒரு தளம்.


முக்கியமாக "கருத்துச்சுதந்திரத்தை" வெளிப்படுத்தும் இடம் ஜோஷியல் மீடியாவில் பெண்கள் மீது எவ்வளவு தான் கேலி, கிண்டல்களை பெண் செய்தாலும் அதையெல்லாம் கடந்துவர "மனவலிமை" என்பது மக முக்கியம். அந்த மனவலிமையும், தெளிவும் இருந்தால் சோஷியல் மீடியாவை விட மிகச்சிறந்த ஆயுதம் பெண்களுக்கு கிடையாது.


# புதுமைகள் கண்ட பாரதி

பார் போற்றும் ஒரு மகாகவி
துறைதோறும் புதுமைகள் செய்த முன்னத்தி ஏர்
எட்டையபுரத்தில் பிறந்த ஆக்க நெருப்பு
தமிழ் நவயுகத்தின் வெள்ளி முளைப்பு
'தமிழிலக்கிய மறுமலர்ச்சியின் மூலபுருஷன்
தமிழிலக்கியத் துறைகள் தோறும்
புதுமைகள் வடித்த இலக்கியச் சிற்பி
மானுடம் பாட வந்த மாக்கவி.
புது நெறி காட்டிய புலவன்.
தன்னைப் பின்பற்றித் தமிழ் வளர்க்க ஒரு பரம்பரையைத்
தோற்றுவித்த ஓர் உயர்கவி.
எண்ணத்தாலும், எழுத்தாலும் இந்திய சிந்தனைக்கு வளம் சேர்த்தவர். பல்துறை அறிஞர், தொலை நோக்கினர், மெய்ஞ்ஞான விஞ்ஞானங்களின் அறிவியல் பார்வை நல்கிய கவிஞானி.
புதிய தமிழகத்தை உருவாக்கக் கனவு கண்ட கவிக்குயில்
வீரத்தையும் தீரத்தையும்
தமிழ்மண்ணில் விதைத்த தலைவன்
தாய்நாடே தனது குடும்பம் என வாழ்ந்தவன்
உழைப்பின் மகத்துவத்தையும்
கூடி வாழ்தலின் நன்மையை உரைத்தவன்
ஆங்கிலயரைக் கண்டு அஞ்சாதவன்.
பேனா முனையின் சக்தியை உலகறியச் செய்தவன்
பாடல்களால் மக்கள் மனதைக் கொள்ளை கொண்டவன்
பாரதம் போற்றும் பாடல்களைப் பாடியவன்
தமிழ்தாய் பெற்றெடுத்த பெருங்கவி தமிழும் தமிழரும் உள்ளவரை போற்றப்படும் மகாகவி
தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளன்
நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடி
தம் எழுத்தால் மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவன்
பல மொழி புலமை பெற்றவன்
பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்த்தவன்
தான் பெற்ற கல்வியை, அறிவை, தெளிவை, ஞானத்தை இந்த உலகுக்கு வழங்கியவன்
சொல் வளமும், இதய திடமும், இலகும் மனமும் கொண்டவன்
கோடி இன்பம் காணும் இயற்கையின் காதலன்
பொதுவுடமை என்னும் சொல்லை தமிழில் கொண்டு வந்தவன்
உலகம் முழுவதும் தன பார்வையை செலுத்தியவன்,
தமிழின் சமய சார்பு அற்ற நவீன கவிதை உலகத்தின் முன்னோடி.
தன் பா திறத்தால், அனைவருக்கும் தன தமிழை கொடையாய் வாரி வாரி

வழங்கியவன்,
கவிதையின் முழு அட்சய பாத்திரமாய் வாழ்ந்தவன்
தமிழ் பிழைக்க உதித்த உத்தமன் பாரதி. எளிய சொல், எளிய பதம், எளிய சந்தம். எளிய வாழ்கை, செழுமையான தமிழ், வீர உணர்வுகள், விவேக சிந்தனை விதைத்தவன்
பாரத விடுதலையை பாக்களில் முரசடித்துப் பறைசாற்றிய நாட்டுக் கவி. ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ மென்று உறுதியாக நம்பிப் பாடிய விடுதலைக் கவி.
நாடகக் காவியம் படைத்த ஓர் நாடகக்கவி. '
ரஷ்யப் புரட்சியைப் பாராட்டிய புரட்சிக் கவி.
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பதில்லையே ' என்று படை வீரர்களுக்கு உச்ச சக்தி ஊட்டிய போர்க்கவி.
கவிதையில் சிலேடை புகுத்திய நக்கல் கவி.
கவிதையில், பாடல்களில் புதுமையாக இசையைப் புகுத்திய இசைக்கவி.
திரைப்படங்களில் அவரது பாடல்கள் திரைக்கவி.
'புதிய ஆத்திச்சூடியை ' ஆக்கிய ஓர் அறக்கவி.
வறுமை, ஏழ்மை, தாழ்மை, கீழ்மை, பழமை, மடமை, பெண்மை பற்றி உணர்ச்சியோடு வெளிப்படுத்தும் மானிடக்கவி.
அடிமைப்பட்ட பெண்களுக்கு விடுதலை அளித்துப் புதுமைப் பெண்களை உருவாக்கிய புதுமைக்கவி. '
மதச்சார்பற்ற பண்பைப் போதித்த மானிடக் கவி.
மனிதனுக்கு மரணமில்லை' என்றே இறுதியாக உறுதிப் பிரகடனம் செய்துவிட்டு வந்தவன்
தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை என்ற பாவேந்தரின் நம்பிக்கை முழக்கத்திற்கேற்ப, மறைந்து நூறாண்டுகள் கழிந்தும் புகழுருவாகத் தமிழ் கூறும் உலகெலாம் வளர்ந்து கொண்டே இருக்கும் விந்தையின் பெயர்தான்
சி.சுப்பிரமணிய பாரதி

எத்தனை எத்தனை புதுமைகள் காண துடித்தாய்
அத்தனை புதுமைகளும் இன்று எம் கண்முன்னே
ஓராயிரம் கவிதைகளை
உச்சரித்த உதடுகளை
ஞான வெளிச்சம் வீசிய
அந்த அறிவு விழிகளை
ரத்தம் வற்றினாலும்
கற்பனை வற்றாத
அந்த இதயத்தை
தேடித்தேடித் தின்றன
தீயின் நாவுகள்.
மகா கவிஞனே!
எட்டையபுரத்து கொட்டு முரசே
நீ இல்லாவிட்டாலும் இவ்வுலகில் எக்காலத்துக்கும் உம் கவிதைகள் வாழும்.
சுதந்திரமே உன் மூச்சு
சாதிக்கத் தூண்டுமே உன் பேச்சு





# கவிதைகள் ஆயிரம் - அவள்

அழகைப் பேசுப் பொருளாக்கின.
அழகின் வியாபாரம்
அடிமைத் தனத்தின் கூப்பாடு- என்று இன்னும் புரியவில்லை பெண்ணுக்கு!
ஆணாதிக்கச் சமூகத்தின் நுகர்வுப்பொருளாய் பெண்ணழகு
புனைவிக்கப்படுகிறது.
குருதியின் துளி ஒன்றில்
குழந்தையைத் தரும்
மாயவித்தைக்காரி-நீ !
ஒருடம்பில் ஈருயிரை -சுமக்கும்
அற்புதம்- நீ!
மண்ணில் வாழும்
பிரம்மா-நீ!
உலக உறவை
உயிர்தெழச் செய்பவள்-நீ!
இரக்கம், தியாகம், காதல்
அன்பால் நிரம்பிக் கிடக்கும்
கலப்பிடமில்லா கருணை -அவள்
விழிகளின் வழியே
இரக்கத்தைப் பாய்ச்சியவள் !இதழ்களின் வழியே
அன்பைச்  சொற்களாய் வீசியவள்!
தியாகத்தை இதயத்தின் துடிப்பாய் கொண்டவள்!
உயிரின் வழியில்
உறவாடிக் கிடப்பவள்!
மழலைக்குத் தன்ணை
உணவாக்கியவள் அன்னை!
அறுவடை செய்யாத
விலை நிலம் -அம்மா!
மண்ணில் விழுந்த
பொருளுக்கெல்லாம்
விலை ஒன்று உண்டாம்
உனக்கென்ன விலை
யார் சொல்லக் கூடும்.
பெண்ணின் பிறப்பெல்லாம் தாய்மையில் நிறைவடையும்-என்னும்
கற்பித வார்த்தைகளால்
உற்பத்திப் பொருளானாய்

புலி அடித்த முறம் எங்கே ?
வாள் பிடித்த கை எங்கே?
வீரக் கழல் அணிந்த கால் எங்கே ?
வாள் பிடித்த கைகள்
வாளைவிட  வலிமைப் படைத்த பேனாவைப் பிடித்திருக்கிறது
மீண்டும் மீளும்
தாய் வழிச் சமூகம்.

வாள் பிடித்த கைகளுக்கு
வளையல் அணிவித்தான் வளையல் ஓசையில் - ஆயிரம் வசீகரம் தந்தாய்
கற்பனையைக் கட்டவிழ்த்தான்!
வளையல் கைகளால்- போர்
வீரம் தொலைந்து போனதை
யாரும் அறியவில்லையே!

காலில் கொலுசை மாட்டி- நடை அழகென்றான் - ஆனால்
நடையின்  வேகம் குறைந்ததை  யாரும் அறியவில்லையே!


அழகியலில் அலங்காரம் -செய்தே
பெண்ணை அடிமையாக்கியவன்
ஆண்.
கற்பின் உருவாக்கமே
அடிமையின் மூலதானம்.

ஆண்களின் புனைவு சொற்களுக்குள் புதைந்து போகாதே!

அழகியலுடன் அறிவும் வீரமும் உனக்குச் சொந்தமானதே!
அடிமை விலங்கை உடைத்து அறிவாய்தம் ஏந்து
வரலாறு உன்னை வாழ்த்தட்டும் ! வாழிய தோழியரே!






பாரதி

கவிதை ஒன்று எழுத நினைந்தேன்
அவளை வர்ணிக்க…
பின்னர் நான் உணர்ந்தேன்
கவிதையே
அவளாய் உருவம் கொண்டதென்று..!

என்னுடைய மகிழ்வுக்கு யார் காரணம்
என்று கேட்டால்…
தைரியமாக சொல்வேன்
நீ தான் என்று…!

தினந்தோறும் உதிக்கும்
சூரியன் கூட  தோற்றுப்போகும்.
உந்தன் கள்ளம் கபடம்
இல்லாத சிரிப்பின் முன்னால்..!

மறந்தால்தானே நினைபதற்கு ?
நீ வீசி சென்ற பார்வையோ
மனதோடு
மறையாமல் இருக்கிறதே..!!

யாரும் இல்லாததால் உன்னைத்தேடி
வரவில்லை
நீ வேண்டும்.
நீ மட்டும் வேண்டும்..
என்பதாலே உன்னை தேடி நாடி வருகிறேன்..!!

என் கண்களுக்குத் தெரிந்த அதிசயம் , நீ !
அதை என்றென்றும்
ரசிக்கும் ரசிகன் நான்…!

உன் முகம் பார்க்கும்
நேரமெல்லாம்
இமைக்க மறக்கிறேன்!
அணைத்துக் கொண்டு அருகில் இருப்பது
மட்டும் காதல் அல்ல…!!
நினைத்துக்கொண்டு தொலைவில் வாழ்வதும்
காதல் தான்…!!

என் கவலைக்கு
ஆயிரம் காரணம்
இருந்தாலும் …..
என் மகிழ்ச்சிக்கு
ஒரே காரணம்
அவள் மட்டுமே..!

இத்தனை தவிப்புகளுக்கும் பின்னால்
நிமிர்ந்து நிற்கும்
ஒற்றை வார்த்தை
‘உன்னை இழக்கிறேன் …!!

பிரிவிற்கு நூறுகாரணம்
இருந்தாலும்….
மீளமுடியா காதலில்
அவளும் நானும்….!




SAHARA
B. Manoj Kiran
B. Manoj Kiran
1st year BSC. Aviation


ந.கிரிதரன்
I st Year B.Com(CS)





## வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
## தீமை இலாத சொலல். (291)

வாய்மை எனப் போற்றப்படும் பண்பு எதுவெனில் அது மற்றவருக்கு எவ்வகையிலும் தீங்கு தராத சொற்களைப் பேசுதல் துணிவு இல்லையேல் வாய்மை இல்லை வாய்மை இல்லையேல் பிற அறங்களும் இல்லைவள்ளுவரும் வள்ளுவனில் வாய்மையும் போற்றபட வேண்டியவை என்னேனில்.. தன் நெஞ்சம் அறிந்து கூட ஒருவன் பொய் சொல்லக்கூடாது அப்படி சொல்லிவிட்டால் அவன் நெஞ்சமே தன்னை வருத்தும். வாய்மை இல்லாதவரின் சொற்களை நம்புவதைவிட விஷப்பாம்பின் பற்களை நம்பலாம். அது போன்ற ஒருவன் வாய்மை மட்டும் பேசவில்லை என்றால் நற்பண்பு இழந்து மனதளவில் காயப்படுவான். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் இறுதியில் வாய்மையே வெல்லும். சூழ்நிலைகள் தன்னை பொய் கூற வைக்கும் ஆனால் நிலைகளை உடைத்து வாய்மை மட்டுமே பேசுதல் தன்னை உயர்த்தும். அதுமட்டுமின்றி: உண்மைக்கு சொல்லிடும் பொய்களும் அழகு என்று வள்ளுவர் எழுதியுள்ளார். பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்தநன்மை பயக்கும் எனின். குறள் 292: குற்றம் தீர்த்த நன்மையை விளைக்குமானால் பொய்யாச் சொற்களும் வாய்மை என்று கருதத் தக்க இடத்தைப் பெறும்.

உன் அன்பில்...

மனதோடு மாலையாய்
நீ என்னை சூடிக்கொள்
உன் மனதில்
உதிராத மலர்களாய்
நான் இருப்பேன்.

கண்களை மூடினாலே
கனவாக வந்து
தங்கி கொள்கிறாய்...
என் விழிகளுக்குள் !

தொலைவில் உன் குரல்
கேட்டாலும்
மனம் ஏனோ பறக்கின்றது
பட்டாம்பூச்சியாய்...!
நீ கட்டலைமிடாமலேயே
கட்டுப்படுகின்றேன்
உன் அன்பில்...

நீயே கேட்டாலும்
விட்டு கொடுப்பதாக
இல்லை
உன் மீதான என் காதலை
நான் கேட்காமல் எனக்கு கிடைத்த வரம் நீ ...
இப்பொழுது வரமாக கேட்கிறேன்
என்றும் உன்னை பிரியாத
வாழ்வு வேண்டும் என்று...!

# ஆசை கவிதை

கண்ணே கலைமானே!
கன்னம் உன்னால் சிவந்தேனே
உன்னால் உணர்ந்தேனே!
உனக்கௌ நானே மலர்ந்தேனோ
மலை தேனே உந்தன் மடிமீது தானே
தூங்கிடுவேனே!
நானே வின்மினே நீனேஎந்தன் முழுமதி !
காதல் முகவரி எந்தன் கவிதையின்!
முதல்வரி அவசரம்வேண்டாம்
உனகெப்போ! பிடிச்சுருக்கே அப்போ
சொன்னா போதும் அது!வரை தாங்கும்
உன்மேல் உள்ள மோகம்எப்படி டி
சாகும் செய்ய மாட்டேன் துரோகம்!
என்மேல் என்ளகோபம்

**க.கு.தருண் ப்ரணவன்**
B. Com (Cs) 1st year.



# என்னவள்

ச.ஹபிப் முஹம்மது
பி.எஸ்.சி., விஸ்காம்
முதலாம் ஆண்டு

பூஞ்சோலையும் பூவிழியும்
பெருமை காக்க வைக்கும்
என் உள்ளத்து பூ அவள்!

தூரத்தில் இருந்தும் வாசமாய்
என் நெஞ்சை துளைக்கிறாள்!

எண்ணற்ற பூக்களில் என்
இதயத்தைப் பரிசாக பெற்ற

அந்த ஒரு பூ எதிர் பாராமல்
என் பூ விழியில் பூத்தது !

அவளைப் பார்த்தது தவறல்ல!
பார்வையின் பிழையுமல்ல!
அது என் வாழ்வின் திருத்தம்!

அவளைக் காதலிப்பது மடமை அல்ல!
அது என் வாழ்வின் கடமை !

ஆள் நடமாட்டம் இல்லாத ஆழ்மனதில்
துளையிட்டு அமர்ந்தாள் அவள் !

ஒரே இன்ப சலசலப்பு! காரணம்
என்னவளின் நடமாட்டம்!

பார்வையாலோ தூரம்! நினைவாலோ
நெருக்கம்! அவளைக் கண்ட நாள் முதல்

வானில் பறக்க ஆசைப்படும்
மண்புழு ஆனேன் நான்!

என் அவலம் தீர்க்கும் அன்புச் செல்வி
அவள் ! உறக்கம் கெடுக்கும் – என்
உயிர்ப் பூ அவள் !

ரசிகர்கள் இல்லா – சீரொளிப்
பாய்ச்சும் அந்த சிற்ப பூவோடு
சுய உரு எடுக்க ஏங்கினேன்!

தூரத்தில் நின்றே ரசித்துக் கொண்டிருந்தேன்..!

பறித்தால் வாடி விடுமோ ?
என்றெண்ணினேன்!

இப்பொழுது இல்லையென்றால்
எப்பொழுது ஆவது என எண்ணி
அருகில் சென்றேன்..

தானாகவே வந்து என் மனக்
கூடையில் அமர்ந்தது அந்தப் பூ !

எதிர்பாராமல் என் பூ விழியில்
பூத்த அந்த தோட்டத்துப் பூ ..

இப்பொழுது என் தொட்டில்
பூ ஆனது !

தோகையால் தலைக் கோதி
விரல்களால் வலி தீர்த்து

மனதால் தாலாட்டுப் பாடி
என்னை உறங்க வைக்கும்
அவள் …
என் இன்னொரு தாய்!
நன்றி.!

Mahalakshmi A
Ist year B.COM., CS., B'Section

# நட்பு

நட்பு என்பது எளிதாக கிடைக்காத ஒன்று அதிலும் ஆண் பெண் நட்பு என்பது பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலரை போன்றது அவ்வளவு எளிதாக கிடைக்காது. ஒரு ஆண் மற்றும் பெண்ணின் நட்பு என்பது காதல் காமம் விமர்சனம் போன்ற தடைகளை தகர்த்து வரும் நட்பு. தந்தை மகள் மீது கொண்ட அன்பையும் தாய் மகன் மீது கொண்ட அன்பையும் யார் என்று அறியா ஒருவரியம் காண்பதே ஆண் பெண் நட்பு. பலரின் பார்வை வழுவாகவும் சிலரின் பார்வை சினமகவும் இருக்கும் இவைகள் அனைத்தையும் கடந்து நம் நட்போ உயர உயர பறக்கும். ஆண் பெண் பேதமில்லாமல் பழகும் ஒரே உறவு நட்பு மட்டுமே.



சங்கவி ஜெய்சங்கர்
ஃபார்ம் டி

# என்னவள் - உன்னவன்

கோ.ரஞ்ஜித் குமார்
B.Com., CS.

எண்ணவளே!
அன்பே ஆருயிரே
இளவரசியே ஈர்க்கும் பறவையே
உலகமே
ஊக்குவிக்கும் தென்றலே
என்னை ஆலும் தேவதையே
ஏறி மேய்க்கும் ராணியே
ஐக்கியம் ஆக்கும் கவிதையே
ஒவ்வொரு நொடியாக ஆனவளே
என்னுள் அவியமாய் வாழும் என்னவளே
என் ஔடதமே
நீ கேட்டதை வாங்கித் தர முடியவில்லை என்றாலும்
என் அன்பை முழுவதும்..
முழு மனதுடன் உனக்கே தருவேன்..
என்னை திருமணம் செய்து
கொள்ள உனக்கு சம்பந்தமா..
என் இள்ளத்தரசியாக அல்ல
என் மாளிகைக்கு இளவரசியாக
- உன்னவன்.



அக் ஷிதா ஜெயா
ஃபார்ம் டி

# என்னவள் - உன்னவன்

கோ.ரஞ்ஜித் குமார்
B.Com.,CS.

எண்ணவளே!
அன்பே ஆருயிரே
இளவரசியே ஈர்க்கும் பறவையே
உலகமே
ஊக்குவிக்கும் தென்றலே
என்னை ஆலும் தேவதையே
ஏறி மேய்க்கும் ராணியே
ஐக்கியம் ஆக்கும் கவிதையே
ஒவ்வொரு நொடியாக ஆனவளே
என்னுள் அவியமாய் வாழும் என்னவளே
என் ஔடதமே
நீ கேட்டதை வாங்கித் தர முடியவில்லை என்றாலும்
என் அன்பை முழுவதும்..
முழு மனதுடன் உனக்கே தருவேன்..
என்னை திருமணம் செய்து
கொள்ள உனக்கு சம்பந்தமா..
என் இள்ளத்தரசியாக அல்ல
என் மாளிகைக்கு இளவரசியாக

- உன்னவன்.

## என்னவனுக்கான கவிதை

அவளை
பாரீத்ததினால்
கவிதை எழுத ஆரம்பித்தோ !!
அவன் என்
வாழ்க்கையில்
வந்ததினால்
எழுத ஆரம்பித்தேனே!!
அவன் என் தோழினாக
இருந்து காதலாக மாறியதால்
எழுத் ஆரபித்தேனே!!
அவன் என்னை
விட்டுச் சென்றான்
எழுத ஆரம்பித்தேனே!!
என்று தெரியவில்லை
ஒன்று மற்றும் தெரிகிறது
நான் எழுதுவது அவணுக்காக என்று!!!

**Staya Dey's**
B.COM.,Cs. I YEAR 'B'SEC

# அம்மா



என்
விழிகளில் அழுதிட
இதழ்களில் சிரித்திட
இமைகளில் உறங்கிட
இம்சையை இரசித்திட
வெற்றியில் களித்திட
தோல்வியில் துவண்பட
முத்தத்தில் மகிழ்நீதிட
சித்தத்தை செதுக்கிட
உதிரத்தைத் துடைத்திட
உயிருடன் கலந்திட
இன்பத்தைப் பெருநீதிட
இன்னலைக் களைத்திட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
உனக்கு தான் பட்ட கடனை
எத்தனை பிறவி எடுத்தும்
தீர்க்க முறியாத நிலையில்
ஒன்று மட்டும்
உறுதி செய்கிறேன்
உன்
உயிர்த்துளியாகக் கருதி
எனக்கு நீ. ஆற்றியவைகளை
மறந்திடும் தாளொன்றில்
இந்த மகளுக்கு
இவ்வுலகம் வைத்திடும்
பெயர் பிணம்!!!

**Kavik**
Ist B.Com(Cs) B


**PRITHIESHA.R**
B.A ENGLISH LITERATURE,
1ST YEAR



**If this isn't love then I don't believe in the existence of love -**

**John H**
(I - BA English)
When you came (Jesus)

When I was in dark
You came as light ;
When no one cared
You picked me up;
When I was lost
You came to find;
When everyone left
You chose to stay;
When love was a dream
You made it true;
When life was messed
You came to build;
When I was broken
You came to fix;
When I wept
You wiped my tears;
When I was down
You lifted me up;



# மரபுக் கவிதை: நேரிசை ஆசிரியப்பா

**மனம்**

“அகில மெங்கும் அலைந்து திரியும்
ஆசை தீர்க்க பறந்தும் செல்லும்
ஆசை தீர்ந்து அறிவன அறிந்தால்
அகிலத் தார்க் காற்றும் செயலே
நன்று என்று இருக்கும்
எண்ணத் தின்கள மாம்மன மதுவே”

**அகம்நிறை இறை**

“எண்ணிய போது எண்ண மானாய்
ஏங்கிய போது துணையாய் நின்றாய்
தூய்மை நெஞ்சில் அன்பாய் மலர்ந்தாய்
அண்டம் நிறை இறையே
என்ன     கத்துள் நிலைபெற் றாயே!”

**இறையே போற்றி!**

“கோடி கோடி நன்றி சொல்வேன்
உன்னைக் கும்பிட லன்றியென் செய்வேன்?
பொருளைப் பெரிதென நினைக்கு முலகில்
அருளைப் பெரிதென நினைக்க வைத்தாய்!
அன்பு ஒன்றால் அறியும் உன்னை
அறிவின் துணையால் தெளிய வைத்தாய்!
உலகப் பொருளனைத் திலுமே நிறைந்தாய்!
இனிய குருவின் துணையா லதைநீ
எமக்கு ணர்த்தி நின்றாய் இறையே!
இறையே போற்றி! இறையே போற்றி!
என்பதன் றியென் சொல்வேன்
என்று முன்னை வணங்கி நிற்பனே!”

முனைவர் **எ.பச்சையப்பன்**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை.
வேல்ஸ் பல்கலைக்கழகம்.

# வியர்வைக்கு விலையா?

அ.பாலாஜி IBCOM
வணிக மேலாண்மை

நான் உழைப்பது உங்களுக்கு தான்
என்று தெரியாமல்
எளனமாய் பார்க்கும் உலகமே!!!
நான்சிந்தும் வியர்வைக்கு
நீ கொடுக்கும் விலை மட்டும் போதுமோ?
வியர்வைக்கு விலையா?
அந்த விலையை வைப்பதற்கும்
எனக்கு உரிமை இல்லையா?
நீ கொடுக்கும் விலையில் நான்
வாழ்கிறேன் என்று நினைக்கிறோமோ?
இல்லை என்னால் கொடுக்கபட்ட
உணவை தான் நீ ரசித்து சாப்பிட்டாய்!
வீண்ணில் பறக்கு போது உனக்கு
தெரியவில்லை, நீ உண்ணும் உணவு
எண்னால் கொடுக்கப்பட்டது என்பது!
இயற்கை வளங்களை அழிக்கும்
உன்முன், இயற்கையை போற்றி

வாழும் தான் சிறியவனாகத்தான் தெரிவேன்!
நான் உன்னை போன்று குளிர் சாதனபெட்டியில்
வாழவில்லை, ஆனால் வெள்ளி முளைப்பதற்கு
முன் எழுத்து நீ அனுபவைக்காத
குளிரையும், நீ எதிர்பார்க்காத வெயிலையும்
அனுபவித்தவன் நான்!
உணவை உணவு தானே!
என்று பார்ப்பவன் நீ!
ஒவ்வொரு தானியத்தையும் குழந்தையாக
பார்ப்பவன் நான்!
உணவில் "கை" வைக்கும் முன்
அதில் ஒரு உழவனின் இரத்தமும்
வியங்வையும் கலந்து உள்ளது.
என்பதை உணர்ந்தால்
அதை வீனாக்கமாட்டாய்!
உனக்கு எப்போது நான் தெரியவருமோ?
உணவை விளைவிக்க தான் முடியும்!
ஏதிலும் பதிவிறக்கம் செய்ய
முடியாது என்பது!!!
இன்று நேற்றில் இருக்கும் என்னை நீ
எளனமாக பார்த்து சிரிக்கலாம் ஆனால்,
நாளை அலை பேசிக்கு அடிமையான
உன்னை நான் பார்த்து சிரிக்கும் காலம்
வரும்!

இப்படிக்கு
நீ எளனமாய் பார்த்த 'உழவன்'

# புதுமைகள் கண்ட பாரதி

**முனைவர் தே தேன்மொழி**
உதவிப் பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம்
சென்னை

பார் போற்றும் ஒரு மகாகவி
துறைதோறும் புதுமைகள் செய்த முன்னத்தி ஏர்
எட்டையபுரத்தில் பிறந்த ஆக்க நெருப்பு
தமிழ் நவயுகத்தின் வெள்ளி முளைப்பு 'தமிழிலக்கிய மறுமலர்ச்சியின் மூலபுருஷன்
தமிழிலக்கியத் துறைகள் தோறும் புதுமைகள் வடித்த இலக்கியச் சிற்பி
. மானுடம் பாட வந்த மாக்கவி.
புது நெறி காட்டிய புலவன்.
தன்னைப் பின்பற்றித் தமிழ் வளர்க்க ஒரு பரம்பரையைத் தோற்றுவித்த ஓர் உயர்கவி.
எண்ணத்தாலும், எழுத்தாலும் இந்திய சிந்தனைக்கு வளம் சேர்த்தவர். பல்துறை அறிஞர், தொலை நோக்கினர், மெய்ஞ்ஞான விஞ்ஞானங்களின் அறிவியல் பார்வை நல்கிய கவிஞானி.
புதிய தமிழகத்தை உருவாக்கக் கனவு கண்ட கவிக்குயில்
வீரத்தையும் தீரத்தையும்
தமிழ்மண்ணில் விதைத்த தலைவன்
தாய்நாடே தனது குடும்பம் என வாழ்ந்தவன்
உழைப்பின் மகத்துவத்தையும்
கூடி வாழ்தலின் நன்மையை உரைத்தவன்
ஆங்கிலயரைக் கண்டு அஞ்சாதவன்.
பேனா முனையின் சக்தியை உலகறியச் செய்தவன்
பாடல்களால் மக்கள் மனதைக் கொள்ளை கொண்டவன்
பாரதம் போற்றும் பாடல்களைப் பாடியவன்
தமிழ்தாய் பெற்றெடுத்த பெருங்கவி தமிழும் தமிழரும் உள்ளவரை போற்றப்படும் மகாகவி
தன்னிகரற்ற புலமை பெற்ற பேரறிவாளன்
நவீன தமிழ் கவிதைக்கு முன்னோடி
தம் எழுத்தால் மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவன்
பல மொழி புலமை பெற்றவன்
பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்த்தவன்
தான் பெற்ற கல்வியை, அறிவை, தெளிவை, ஞானத்தை இந்த உலகுக்கு

வழங்கியவன்

சொல் வளமும், இதய திடமும், இலகும் மனமும் கொண்டவன்

கோடி இன்பம் காணும் இயற்கையின் காதலன்

பொதுவுடமை என்னும் சொல்லை தமிழில் கொண்டு வந்தவன்

உலகம் முழுவதும் தன பார்வையை செலுத்தியவன்,

தமிழின் சமய சார்பு அற்ற நவீன கவிதை உலகத்தின் முன்னோடி.

தன் பா திறத்தால், அனைவருக்கும் தன தமிழை கொடையாய் வாரி வாரி வழங்கியவன்,

கவிதையின் முழு அட்சய பாத்திரமாய் வாழ்ந்தவன்

தமிழ் பிழைக்க உதித்த உத்தமன் பாரதி. எளிய சொல், எளிய பதம், எளிய சந்தம். எளிய வாழ்கை, செழுமையான தமிழ், வீர உணர்வுகள், விவேக சிந்தனை விதைத்தவன்

பாரத விடுதலையை பாக்களில் முரசடித்துப் பறைசாற்றிய நாட்டுக் கவி.

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ மென்று உறுதியாக நம்பிப் பாடிய விடுதலைக் கவி.

நாடகக் காவியம் படைத்த ஓர் நாடகக்கவி. ‘

ரஷ்யப் புரட்சியைப் பாராட்டிய புரட்சிக் கவி.

அச்சமில்லை, அச்சமில்லை, அச்சம் என்பதில்லையே ‘ என்று படை வீரர்களுக்கு உச்ச சக்தி ஊட்டிய போர்க்கவி.

கவிதையில் சிலேடை புகுத்திய நக்கல் கவி.

கவிதையில், பாடல்களில் புதுமையாக இசையைப் புகுத்திய இசைக்கவி.

திரைப்படங்களில் அவரது பாடல்கள் திரைக்கவி.

‘புதிய ஆத்திச்சூடியை ‘ ஆக்கிய ஓர் அறக்கவி.

வறுமை, ஏழ்மை, தாழ்மை, கீழ்மை, பழமை, மடமை, பெண்மை பற்றி உணர்ச்சியோடு வெளிப்படுத்தும் மானிடக்கவி.

அடிமைப்பட்ட பெண்களுக்கு விடுதலை அளித்துப் புதுமைப் பெண்களை உருவாக்கிய புதுமைக்கவி. ‘

மதச்சார்பற்ற பண்பைப் போதித்த மானிடக் கவி.

மனிதனுக்கு மரணமில்லை’ என்றே இறுதியாக உறுதிப் பிரகடனம் செய்துவிட்டு வந்தவன்

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை” என்ற பாவேந்தரின் நம்பிக்கை முழக்கத்திற்கேற்ப, மறைந்து நூறாண்டுகள் கழிந்தும் புகழுருவாகத் தமிழ் கூறும் உலகெலாம் வளர்ந்து கொண்டே இருக்கும் விந்தையின் பெயர்தான் சி.சுப்பிரமணிய பாரதி

எத்தனை எத்தனை புதுமைகள் காண துடித்தாய்
அத்தனை புதுமைகளும்  இன்று எம் கண்முன்னே
ஓராயிரம் கவிதைகளை
உச்சரித்த உதடுகளை
ஞான வெளிச்சம் வீசிய
அந்த அறிவு விழிகளை
ரத்தம் வற்றினாலும்
கற்பனை வற்றாத
அந்த இதயத்தை...
தேடித்தேடித் தின்றன
தீயின் நாவுகள்.
மகா கவிஞனே!
எட்டையபுரத்து கொட்டு முரசே
நீ இல்லாவிட்டாலும் இவ்வுலகில் எக்காலத்துக்கும் உம் கவிதைகள் வாழும்.
சுதந்திரமே உன் மூச்சு
சாதிக்கத் தூண்டுமே உன் பேச்சு



# சிறகு

**முனைவர் கி. துர்காதேவி,**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, விஸ்டாஸ்

சிறகு பறப்பதற்கு
பிறகு எப்படி நாம்
அவ்வப்போது பறக்கிறோம்...?

மனதில் ஆசை விதைப்பதால்...!
உணர்வில் ஓசை எழுவதால்....!
மகிழ்வில் உள்ளம் துடிப்பதால் ....!
சருகு போல் லேசாகி
இறகு போல் மென்மையாய்
சிறகுகள் இன்றி
நமக்கான வாழ்வில் பறக்கும் தருணங்கள் எப்போதாவது தான்....!

காதலின் மகிழ்வில்
கருநீல தண்வானில் பறக்க....
அன்பைப் பகிர்ந்துகொள்!

நேசத்தின் உணர்வில்
செவ்வானில் மிதக்க....
பாசத்தைப் பதிந்துகொள்!

ஒற்றுமையின் சிறப்பில்
நிலவுடன் மிதக்க....
உறவுகளை நிரப்பிகொள் !

வெற்றியின் களிப்பில் பொன்வானில் பறக்க...
திறமைகளை வளர்த்துக்கொள்!

நமக்கான வாழ்வில்
நமக்கான சிறகை விரித்து
நமக்கான தருணத்தில்...
பறந்து மகிழ முயற்சிசெய்!
வானம் வசப்படும்!!

# விழிகளின் வழியே!

**முனைவர் செ.மார்கண்டன்**
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை, விஸ்டாஸ்.

கவிதைகள் ஆயிரம் - அவள்
அழகைப் பேசுப் பொருளாக்கின.

அழகின் வியாபாரம்
அடிமைத் தனத்தின் கூப்பாடு- என்று இன்னும் புரியவில்லை பெண்ணுக்கு!

ஆணாதிக்கச் சமூகத்தின் நுகர்வுப்பொருளாய்
பெண்ணழகு புனைவிக்கப்படுகிறது.

குருதியின் துளி
ஒன்றில்
குழந்தையைத் தரும்
மாயவித்தைக்காரி-நீ !
ஒருடம்பில் ஈருயிரை -சுமக்கும்
அற்புதம்- நீ!

மண்ணில் வாழும்
பிரம்மா-நீ!

உலக உறவை
உயிர்தெழச் செய்பவள்-நீ!

இரக்கம், தியாகம், காதல்
அன்பால் நிரம்பிக் கிடக்கும்
கலப்பிடமில்லா கருணை -அவள்

விழிகளின் வழியே
இரக்கத்தைப் பாய்ச்சியவள் !இதழ்களின் வழியே
அன்பைச் சொற்களாய் வீசியவள்!
தியாகத்தை இதயத்தின் துடிப்பாய் கொண்டவள்!
உயிரின் வழியில்
உறவாடிக் கிடப்பவள்!

மழலைக்குத் தன்னை
உணவாக்கியவள் அன்னை!

அறுவடை செய்யாத
விலை நிலம் -அம்மா!

மண்ணில் விழுந்த
பொருளுக்கெல்லாம்
விலை ஒன்று உண்டாம்
உனக்கென்ன விலை
யார் சொல்லக் கூடும்.

பெண்ணின் பிறப்பெல்லாம்
தாய்மையில் நிறைவடையும்-என்னும்
கற்பித வார்த்தைகளால்
உற்பத்திப் பொருளானாய்

புலி அடித்த முறம் எங்கே ?
வாள் பிடித்த கை எங்கே?
வீரக் கழல் அணிந்த கால் எங்கே ?
வாள் பிடித்த கைகள்
வாளைவிட  வலிமைப் படைத்த
பேனாவைப் பிடித்திருக்கிறது
மீண்டும் மீளும்
தாய் வழிச் சமூகம்.

வாள் பிடித்த கைகளுக்கு
வளையல் அணிவித்தான் வளையல் ஓசையில் -
ஆயிரம் வசீகரம் தந்தாய்
கற்பனையைக் கட்டவிழ்த்தான்!
வளையல் கைகளால்- போர்
வீரம் தொலைந்து போனதை
யாரும் அறியவில்லையே!

காலில் கொலுசை மாட்டி- நடை அழகென்றான் - ஆனால்
நடையின்  வேகம் குறைந்ததை  யாரும் அறியவில்லையே!

அழகியலில் அலங்காரம் -செய்தே
பெண்ணை அடிமையாக்கியவன்
ஆண்.
கற்பின் உருவாக்கமே
அடிமையின் மூலதானம்.

ஆண்களின் புனைவு சொற்களுக்குள் புதைந்து போகாதே!

அழகியலுடன் அறிவும் வீரமும் உனக்குச் சொந்தமானதே!
அடிமை விலங்கை உடைத்து அறிவாய்தம் ஏந்து
வரலாறு உன்னை
வாழ்த்தட்டும் ! வாழிய தோழியரே!

# தமிழ்த்துறை

முத்தமிழ் விழாப் போட்டிகளில் பரிசு பெற்றோர் (15.03.2024)

**பேச்சுப் போட்டி**

1. முதல் பரிசு- பெரோஸ் ஷெரிப் (சட்டத்துறை)
2. இரண்டாம் பரிசு-வ. கனிமொழி (பி.டெக் பயோ.டெக்)
3. மூன்றாம் பரிசு - பாலாஜி (இளநிலை வணிகவியல்)

**பாட்டுப் போட்டி**

1. முதல் பரிசு - சி. ஸ்ரேயாஞீ (இளம் அறிவியல்)
2. இரண்டாம் பரிசு -மா. யக்ன பிரியா (பி.டெக்)
3. மூன்றாம் பரிசு - கோ. ஜமுனா ராணி (சட்டத்துறை)

**கட்டுரைப் போட்டி**

4. முதல் பரிசு- மு. சத்யா (கல்வியல் துறை முதலாமாண்டு)
5. இரண்டாம் பரிசு-த.தா. விசாலி (கணினிப் பயன்பாட்டியல் முதலாமாண்டு ஈ. பிரிவு)

6. மூன்றாம் பரிசு - பெரோஸ் ஷெரிப் (சட்டத்துறை)

**கவிதைப் போட்டி**

1. முதல் பரிசு- கோ. மணிதீபா(பி.டெக் பயோ டெக் 2ஆம் ஆண்டு)
2. இரண்டாம் பரிசு -அனுக்கிரகா (இளநிலை - சட்டத்துறை)
3. மூன்றாம் பரிசு -ம தேவிப்ரியா (இளநிலை காட்சித்தொடர்பியல் துறை)

**ஓவியப் போட்டி**

1. முதல் பரிசு- எஸ். வெற்றிவேல் (பி.டெக் ஏ.எல்-எம்.எல். இரண்டாமாண்டு)
2. இரண்டாம் பரிசு- வி. சஞ்சனா (இளம் நிலை முதலாமாண்டு- அசைவு சித்திரத்துறை)
3. மூன்றாம் பரிசு - எஸ் ஸ்வாதி (இளநிலை முதலாமாண்டு- கணினி பயன்பாட்டியல்)

# பயணம்

**முனைவர் நாகலட்சுமி,**
ஆங்கிலத் துறை,விஸ்டாஸ்

நீண்ட பயணம்
நெடு நேர மௌனம்.
கடந்து செல்லும் மரம் ....
ஓடும் மனம்
தேடும் மனிதம்!

வருடங்கள் உருண்டது.
வசதிகள் வளர்ந்தது.
மனிதம் தேய்ந்தது.
மக்கள் மாக்கள் ஆகினர்!
பணம் பாடமானது....
பாடம் பட்டமானது....
பட்டம் தம்பட்டமானது!
காகித பூக்கள் மணம் தரா
யார் இவர்கள்?
காகித பூக்கள் மனம் தரும்
மானம் தரும்
மகிமை தரும்
மகிழ்ச்சி தரும்











**வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 15ஆம் ஆண்டு
கடல்சார் படிப்புகளுக்கான பிரியாவிடை அணிவகுப்பு விழா,
கடல்சார் பள்ளி வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.**


VELS




VELS









வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 15ஆம் ஆண்டு
கடல்சார் படிப்புகளுக்கான பிரியாவிடை அணிவகுப்பு விழா,
கடல்சார் பள்ளி வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.






மாண்புமிகு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களைத்
தம் குழுவினருடன் சந்தித்து வாழ்த்தி மகிழ்கின்றார் தமிழ்நாடு ஒலிம்பிக்ஸ் சங்கத் தலைவர்
வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள்




வேல்ஸ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் 'கிரேஸ் பாஸிங்' நிகழ்வில் மாண்புமிகு இந்திய
நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுடன் வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்'
டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள்; உடன், மதிப்புறு டாக்டர் பட்டம் பெறுவோரும்,
வேல்ஸ் பல்கலைக்கழகக் கல்வி அலுவல் குழுவினரும்



மாண்புமிகு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களைத்
தம் குழுவினருடன் சந்தித்து வாழ்த்தி மகிழ்கின்றார் தமிழ்நாடு ஒலிம்பிக்ஸ் சங்கத் தலைவர்
வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள்




வேல்ஸ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் 'கிரேஸ் பாஸிங்' நிகழ்வில் மாண்புமிகு இந்திய
நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுடன் வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்'
டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள்; உடன், மதிப்புறு டாக்டர் பட்டம் பெறுவோரும்,
வேல்ஸ் பல்கலைக்கழகக் கல்வி அலுவல் குழுவினரும்




மாண்புமிகு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களைத்
தம் குழுவினருடன் சந்தித்து வாழ்த்தி மகிழ்கின்றார் தமிழ்நாடு ஒலிம்பிக்ஸ் சங்கத் தலைவர்
வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள்




வேல்ஸ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் 'கிரேஸ் பாஸிங்' நிகழ்வில் மாண்புமிகு இந்திய
நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுடன் வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்'
டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள்; உடன், மதிப்புறு டாக்டர் பட்டம் பெறுவோரும்,
வேல்ஸ் பல்கலைக்கழகக் கல்வி அலுவல் குழுவினரும்